ஸ்ரீ குமர குருபரர்

18668

மறைஞான சம்பந்தர்

ஆவணி 1 (17—8—83)
தொகுதி 5 பகுதி 11

உ

சிவ சிவ

'ஸ்ரீ குமரகுருபரர்'

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய — இலக்கியத் திங்கள் இதழ்.

சிறப்பாசிரியர்.

பேராசிரியர்

திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-

திரு. மு. அருணசலம், M. A., திருச்சிற்றம்பலம்

திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை

மகாவித்துவான்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலைநகர்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T, காஞ்சிபுரம்

புலவர் திரு கீரன், லால்குடி

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D., மதுரை

திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்

திரு. பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்

அட்டையில் :

ஸ்ரீ மறைஞானசம்பந்தர்
திருவுருவம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

அருள் பழுத்த கனிச்சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

இல்வாழ்வு மேற்கொண்டவர்களுக்குப் பாசங்கள் காரணமாகவும், பற்றுக்கள் காரணமாகவும் பலப்பல தொல்லைகள் தோன்றுவது இயற்கை. அத்தொல்லைகளிலிருந்து விடுபட அவர்கள் பல தெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொள்வார்கள். இல்லறத்தவர்களுக்கு மறுமையும் வீடுபேறும் முதல் நோக்கமாக இருப்பது துர்லபம்தான்.

துறவிகள் 'பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல் உன் கழல் மறவாமை வேண்டும்' என்னும் வைராக்யம் கொண்டவர்கள். எனவே அவர்கள் 'பல்லாண்டு என்னும் பதம் கடந்தானுக்குப் பல்லாண்டு' கூறித்துதிப்பதைத் தவிரச் 'சில்லாண்டிற்சிதையும் சிறுதெய்வம் சிறுநெறி, சேரார்.

இத்தகு துறவிகளும் ஸ்ரீ மாசிலாமணித் தேசிகனைத் துதிக்கிறார்கள் என்றால் 'அவனே சிவன்; சிவனே அவன்' என்பது உறுதியாகிறது.

தவர் என்னும் சொல் தவசிகளைச் சுட்டும். அரும் தவர் என்பது அத்தவ நிலையில் பலபடிகள் கடந்து மேலோங்கிய உயர் பெருந்துறவிகளைச் சுட்டும். அவர்கள் இக் குரு நாதனைத் துதிக்கிறார்கள் என்றால் மாசிலாமணி ஞானசம் பந்தன் என்னும் இத் திருநாமம் சாமான்ய மானுட சரீரத்தைக் குறிக்கும் பெயரன்று. இது பெரும் பெயர் ஆகும். சிவன் என்பதே பெரும் பெயர். துறவிகள் துதிப் பதால் இது உறுதியாகிறது. 'துறந்த முனிவர் தொழும் பரவைத் துணைவா' என இதே முறையில் சுந்தரரைச் சிவப் பிரகாசர் சிறப்பிப்பார். தம் குருநாதராகிய மாசிலாமணி தேசிகரை முன்னவராகிய குருஞானசம்பந்தராகவே கூறும் மரபு முன்னரும் பலமுறை கூறப் பெற்றது.

காசுலாம் பசும்பொன் கடிமதில் கமலை
மாசி லாமணி ஞானசம் பந்தன்என்(று)
அருந்தவர் துதிப்பஒர் பெரும்பெயர் நிறீஇ

[காசு - நாணயம்; கடி - காவல்; கமலை - திருவாரூர்; தவர் - தவசிகள்]

காசு என்னும் சொல்லுக்குக் குற்றம் என்ற பொருளும் நாணயம் என்ற பொருளுமே பெருவழக்கு. பொன்னென்று ஒரு பொருளும் உண்டு. பசும்பொன் என்பதற்கு அடை யாகக் காசு என்பது இங்கு வந்துள்ளமையால் நாணயம் செய்வதற்கேற்ற உயர்ந்தவகைப் பொன்னாலாகிய மதில் எனப் பொருள் கொள்ள அமைகிறது. உயர்ந்தவகைப் பொன்னாலாகிய நாணயங்களுக்கு உயர்ந்த மதிப்பும் குற்ற முள்ள பொன்னாலாகிய நாணயங்களுக்குக் குறைந்த மதிப்புமாகச் சம்பந்தர் அப்பர் காலத்திலும் இருந்தமை ஈண்டு அறிதல் தகும்.

தேவர்கட்குத் திருப்பாற் கடலைக் கடைந்தபொழுது அமுதம் கிடைத்தது. பேரின்பமாகிய கடலுள் தோன்றிய

அமுதம் ஸ்ரீ மாசிலாமணி என்னும் அமுதம். இது இன்பமே செறிந்த அமுதம். தானே தோன்றிய அமுதம். இந்த அமுதம் மெய்யன்பர்களுக்கு மிக மிக எளிமையாகக் கிடைக்கும்; தேவர்கட்குக் கிடைத்தற்கு அரிதாகும்.

பரமா னந்தப் பரவையுள் தோன்றிய
இன்பஆர் அமுதம்அவ் அமுதம்
அன்பருக்கு எளிதுஎளிது அரிதுவிண் ணவர்க்கே

என்கிறார் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். (பரவை - கடல்)

எளிதுஎளிது என இருகால் மடித்துக் கூறியதில் ஒரு நயமுண்டு. அத்தொடரை ஸ்ரீ சுவாமிகள்,

அன்பருக்கு எளிது, அரிது அரிதுவிண் ணவர்க்கே

என விண்ணவருக்கு மிக அரியது எனும் பொருளில் பாடியிருக்கலாம். அவ்வாறன்றி எளிது என்பதையே இருகால் மடித்தமை ஏன் என்று கருதிப் பார்க்கவேண்டும்.

அன்பர்கள் என்பது ஈண்டு ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்களின் அடியார்களைக் குறிக்கும். பரம் பொருளே குருவடிவாகி மானுடச் சட்டை தாங்கி மண்ணுலகில் இருக்கும் இதுபோது அவ்வமுதத்தைத் துய்த்தல் மானுட அடியார்களுக்கே மிக எளிமையாகிறது. தேவர்கள் இவ்வமுதத்தைத் துய்க்க வேண்டுமானால் தேவராக இருக்கும் புண்ணியப் பயன் தீர்ந்து மீண்டும் மானுடராகும் போதே இயலும். எனவே விண்ணவர் ஸ்ரீ மாசிலாமணி என்னும் அமுதத்தைத் துய்க்கவே முடியாது என்றில்லை. உடனே முடியாது. மானுட மெய்யடியார்கள் துய்க்கும் அளவுக்கு எளிமையாக முடியாது. இக்கருத்துக்களை உள்ளடக்கியே எளிது என்பதை இருகால் மடித்தும் அரிது என்பதனை ஒருகாற் கூறியும் ஸ்ரீ சுவாமிகள் செய்யுளை அமைத்தருளினார்.

—சிவ சிவ

தமிழ் ஈழம்

சிங்கக் கொடி அசிங்கமாக – அகோரமாக ஆடுகிறது.

தமிழர்களே ஆண்ட தமிழ் நிலப் பகுதியில் இன்று தமிழர்களின் ரத்தம் ஆறுக ஓடுகிறது! பிணமலைகள் குவித்துள்ளன. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதும், பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் ஜீவ மரணப் போராட்டத்தில் விழிஇழந்தும், கையிழந்தும், காலிழந்தும், அடி பட்டும், நசுங்கியும், நெரிபட்டும் அல்லற்படுவதை நினைத்தாலே நெஞ்சு வெடிக்கிறது.

இத்தனையையும் திருவிழாப் போலக் கருதி நடத்திக்கொண்டிருப்பவர்கள் சிங்களவர்கள், ராணுவம், போலீஸ்! ஏன் அதிபரின் பக்கபலமும்கூட!

மகாவம்சமே! நீ முன்பும் பலமுறை சேற்றைப் பூசிக் கொண்டு சந்தோஷப் பட்டதுண்டு! இப்பொழுது ரத்தத்தைப் பூசிக் கொள்கிறுய்!

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் ஆட்சிமொழியென்றபோது — தோட்டத் தொழிலாளர்களாகிய பல்லாயிரம் தமிழர்களுக்குக் குடியுரிமை கிடையாது என்று சட்டம் செய்தபோது, —

1958 இல் இனக்கலவரம் செய்து நூற்றுக்கணக்கான தமிழர்களை சிங்களக் குண்டர்கள் கொன்று குவித்தபோது —

1972 ஆம் ஆண்டு தமிழர்களின் உரிமைப் பாதுகாப்புப் பற்றிய அரசியல் சாசனம் 29 ஆம் சரத்தை ரத்துச்செய்தபோது —

10 – 1 - 74 அன்று யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சியில் உலகெங்கிலுமிருந்து வந்த தமிழறிஞர்கள் உட்பட 50,000 தமிழர்கள்மீது போலீசும், இராணுவமும் புகைக் குண்டுகளை வீசியும், துப்பாக்கிகளால் சுட்டும் கலவரமாக்கியபோது—

1981 ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்திலிருந்த உலகப் புகழ்பெற்ற தமிழ்நூல் நிலையத்தைச் சாம்பலாக்கிக் கோர நர்த்தன மாடியபொழுது —

தமிழகம் – இந்தியா — உலகம் அவதானிக்கவில்லை என்று சிங்கள வன்கள் கருதினல் அவர்கள் தன் முட்டாள்தனத்தை மேலும் உறுதி செய்துகொள்கிருர்கள் என்றுதான் அர்த்தம்!

5 - 10 - 1978 அன்று ஐ. நா. சபைக் கூட்டத்தில் — உறுப்பினர் அல்லாத கிருஷ்ண வைகுந்த வாசன் என்ற தமிழர் 35 லட்சம் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காகக் குரல் கொடுத்தபோது அந்த ஆவேசத்தின் அஸ்திவாரம் எவ்வளவு கெட்டியானது என்பது புரிந்து விட்டது.

இலங்கையின் தமிழ்ச் சமுதாயத்தை 30 சதவிகிதமாகக் குறைக் கவே நாடாளுமன்றமும் ஆட்சியும் என அமைந்த அவலட்சணங்களைச் சிங்களவர்கள் கண்ணை மூடிக்கொண்டு செய்திருக்கலாம். அது உலகத்திற்குத் தெரியாமற் போகவில்லை.

அப்பொழுதெல்லாம் ''அது இலங்கையின் பிரச்சனை; உள்நாட்டு விவகாரம்'' என்று இந்திய அரசு இருந்ததும், தமிழக அரசு இப் பொழுது உள்ள வேகத்தில் அப்பொழுதெல்லாம் நடுவண் அரசின் கவனத்தை ஈர்க்காததும் தவறுதான்.

இனியும் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்புத் தருவதில் ஒரு நிரந்தரமுடிவை ஏற்படுத்தாவிடில் சரிப்பட்டு வராது! மெத்தனங்கள் இனி மரியாதையை இழந்து விடும்!

அணிசேரா நாடுகளின் அரும்பெரும் தலைவியாகிய – நம்பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் தமிழ் ஈழம் பிரிந்து தனிநாடாவதற்கு எந்த வகையிலேனும் வழிசெய்ய வேண்டும்!

இது மகாத்மா காந்தி வற்புறுத்திய பாகிஸ்தான் பிரிவு போன்றது! இது நியாயமான பிரிவு! இவ்வளவு நடந்ததற்குப் பிறகும் ரத்தவெறியர்களுடன் தமிழர்கள் ஒன்ருக இருக்கமுடியாது!

நாம் இதைச் செய்யவில்லை என்ருல் 'இந்தியா கையா லாகாத நாடு; அவர்கள் வம்சாவளியினரையும், அவர்கள் நாட்டின்

மொழியொன்றைப் பேசும் அண்டை நாட்டுக்காரர்களையும் கூடக் காப்பாற்றத் திராணியற்றது' என்று உலகம் நம்மைக் கேலி பேசும்!

'தமிழீழநாட்டைப் பிரித்துத் தமிழர்கள் கையில் கொடுத்து விடுங்கள்! இதைத் தவிர வேறுவழியில்லை' என்று அன்னை இந்திரா செயவர்த்தனேவை வற்புறுத்தவேண்டும். 'இது செய்யவில்லை என்றால் உடன் எங்கள் ராணுவம் வரும்'' என்று தைரியமாகத் தெரிவிக்க வேண்டும்.

இது இந்தியாவின் கௌரவப் பிரச்சனை!

இது மனிதாபிமானப் பிரச்சனையும் கூட!

குற்றுயிரும் குலையுயிருமாய் இருப்பவர்களுக்குக் கோதுமை அனுப்பி விடுவதினாலோ கொழும்புவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் கப்பல் விடுவதினாலோ நிரந்தரப் பரிகாரம் ஏற்பட்டுவிடாது. அவை தாற்காலிக நிவாரணங்கள்!

இப்பொழுது தமிழகமும், இந்தியாவும் இந்திரா செய்ய வேண்டியதாக எதிர்பார்ப்பது நிவாரணங்களை அல்ல; பரிகாரங்களை. நிரந்தரமான பரிகாரம் தமிழ் ஈழம் தான்!

நி. ஆ - ர்

வெளிவந்துவிட்டன

1. திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால்
விலை ரூ. 7 - 50
(திரு. கோ வன்மீகநாதன் ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)

2. சிவப்பிரகாசம் விலை ரூ. 2 - 50
(திரு. கு. சுந்தரமூர்த்தி விளக்கவுரையுடன்)

3. நீதிநெறிவிளக்கக் கருத்தரங்கக் கட்டுரைகள்
விலை ரூ 3 - 00

தகவல்களுக்கு : மேலாளர், ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள் 612 504

இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

1. பசி எடுக்க

கொய்யா இலையை, காலை வேளையில் தினம் சாப்பிட்டு வரப் பசி உண்டாகும்.

2. தோல் வியாதி (SKINDIASEASE)

வெள்ளரிக் காயின்சாறு எடுத்துச்சாப்பிட்டு வரத் தோல் வியாதிகள் குணமாகும்.

3. இரத்த அழுத்தம் (BLOOD PRESURE)

வெள்ளரிக்காயின் சாறு எடுத்துத் தினசரி சிறிது நாள் சாப்பிட்டு வர இரத்த அழுத்த குறையும்.

Dr. N. சடையப்பன் S. M. P

ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுள் சந்தா	(உள்நாடு)		100-0000
,,	(வெளிநாடு)		125-0000
ஆண்டுச் சந்தா	(உள்நாடு)		7-50
,,	(லங்கா)		10-00
,,	(வெளிநாடு)	ரூ.	12-00

விளம்பரக் கட்டண விகிதங்கள்

அட்டை பின் பக்கம் 2 வண்ணங்கள்	ரூ	150-00
முன் அட்டை உள்பக்கம்	ரூ.	125-00
பின் அட்டை உள் பக்கம்	ரூ.	100-00
உள்முழுப்பக்கம்	ரூ.	60-00
உள்அரைப்பக்கம்	ரூ.	30-00

"9, 10, 11, - ஆம் திருமுறைகள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

கா. ம. வேங்கடராமையா எம். ஏ.,

14. ஒரு கருத்தே மீண்டும் வருதல் உண்டு. "என்னுளம் புகுந்த எளிமையை என்றும் நான் மறக்கேன்" என்று கருவூர்த்தேவர் கங்கைகொண்டசோழேச்சுரத்திலும் திருப்பூவணத்திலும் தஞ்சை ராசராசேச்சுரத்திலும் ஆராமை காரணமாகப் பாடியுள்ளார்.

15. சுட்டுமுன்னே பயிறல்: "இத்தெய்வ நெறிநின்று" என்று சேந்தனரும், "அக்கனு அனைய செல்வமே சிந்தித்து" என்று சேந்தனரும் கருவூர்த்தேவரும் தம் பாடல்களின் தொடக்கத்திலேயே சுட்டு முன்னே பெய்து பாடியுள்ளனர்.

16. வசைபாடுதல்: சேந்தனர் "மன்னுசதில்லை, வளர்க நம் பத்தர்கள் வஞ்சகர் போயகல" என்றும், "மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார் விரைந்து வம்மின்" என்றும் தம் சமயப் பற்றைத் தெரிப்பதோடு அமைவர். ஆனல் திருமாளிகைத் தேவர் ஒருபதிகம் முழுவதும் வேற்றுச்சமயத்தவரை வெறுத்துப் பேசுவர்.

"மணவடியார்கள் வன்மைக் குணங்களைக் கூறுவீறில் கோறை வாய்ப் பிறர்பிண்டப் பிணங்களைக் காணுகண்; வாய்பேசாது; அப் பேய்களோடே" என்றும், "தில்லை கூத்துகந்து தீய நசிக்க வெண்ணீற தாகும் நமர்களை நணுகா நாய்கள்" என்றும், "அசிக்க ஆரியங் களோதும் ஆதனரப்பேத வாதப்பிசுக்களரைக் காணுகண்; வாய்பேசாது அப்பேயகளோடே" என்றும் "இணங்கிலா ஈசன்" என்ற முதற் குறிப்புடைய கோயில் திருவிசைப்பாவில் வசைபாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் அருளிய "அச்சப்பத்து" சைவசமயிகளல்லா தாரைக் கண்டு அஞ்சுதலைச்சூறும். திருமூலரும் "புறச்சமய தூடணம்" என்று 20 பாடல்கள் பாடியுள்ளார். அவர் "கத்தும் கழுதைகள் போலும் கலதிகள்" என்றும், "சிவ கதியே கதி மற்றுள்ளவெல்லாம் பவகதி" என்றும் குறை கூறுவர். சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்திலும்

7 – ஆவது திருப்பாடலில் சைனபௌத்த சமயத்தவரைச் சாடுதலை காண்கிறோம். ஆழ்வார்களில் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும்,

''வெறுப்பொடு சமண முண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில் போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையு மாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகரு ளானே''

என்றமையும் அந்நாளைய நிலைமைக்கு எடுத்துக்காட்டு.

17. சமய தோத்திர நூல் ஆகலின் சமயக் கருத்துக்களைப் பாடுவதே கடமை; அவற்றுள் சில பின்வருமாறு:-

'திருநீறிடாவுருத் தீண்டேன்' என்றும், 'ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர வெண்ணீறிடப் பெற்றே னென்னும்' என்ற விடயங்களில் திருநீறு ஐந்தெழுத்துக்களும், ''உறைப்புடை யடியர்'' என்றமையால் சமயத்தில் ஆழ்ந்தபற்று உடையராயிருத்தல் வேண்டும் என்பதும், 'சிறு தெய்வ நெறிக்கே திகைக்கின்றேன் எனைத் திகையாமே' என்றவிடத்தும் 'சில்லாண்டிற் சிதையும் சிறுநெறி சேராமே' என்ற விடத்தும் சிறு தெய்வ வழிபாடு கூடாது என்பதும், ''தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த தயாவை நூறுயிரங் கூறிட்டு, அத்திலங்கொரு கூறு உன்கண் வைத்தவருக்கு அமருலகளிக்கு நின்பெருமை'' என்ற கருவூர்த் தேவர் திருவிசைப்பாவால் சிவ பெருமானிடத்தில் ஆராத அன்பு பூண்டொழுக வேண்டும் என்பதும், மேலும் ''இறைவன் கருது வார் கருதும் உருவில் வந்தருள்வன்'', ''இறைவன் சக்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த தனி முழு முதலாய் இருக்கிறான்'' என்றின்னோரன்ன பிறவும் இத்திருமுறையினின்றும் அறியலாம்.

18. இவ்வொன்பதாம் திருமுறைக்குரிய இரண்டு சிறப்புக்கள் குறிப்பிடல் தகும்:

சைவ அன்பர்கள் திருக்கோயில்களில் பஞ்சபுராணம் ஓதுதல் என்ற மரபையுடையவர் ஆவர். அதாவது தேவாரத்தில் ஒரு பாடல்; திருவாசகத்தில் ஒன்று; திருவிசைப்பா ஒன்று; திருப்பல்லாண்டு ஒன்று; பெரியபுராணம் ஒன்று; எனவே ஐந்தில் இரண்டு இத்திருமுறை யினின்று பாடப்பெறுதல் அறிதற்பாலது

திருப்பல்லாண்டு கடல்கடந்த நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்தொனேசியாவில் பெருஞ்செல்வர் வீடுகளில் திருமணக் காலத்தில் திருப்பல்லாண்டு ஓதப்பெறுகிறது என்றும், இதற்கு அன்னோர் ''லாண்டுபாடு'' என்று பெயர் கூறுவார் என்றும், இது ''மான்கடில்'' எனத் தொடங்குவது என்றும் ஆய்வாளர் கூறுவர். ''மான்கடில்'' என்பது திருப்பல்லாண்டின் முதற்குறிப்பு ஆகிய ''மன்னுகதில்லை''என்பதன் சிதைவாகும்.

(3)

பத்தாம் திருமுறை: திருமந்திரம்.

1. இப்பெருநூல் தந்திரங்கள் என்ற பெரும்பிரிவினையுடைய பெரும் பிரிவுகளாலாயது. ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களாகிய காரணம் காமிகம் வீரம் சிந்தம் வாதுனம் காலோத்தரம் சுப்பிரபேதம் மகுடம் வியாமளம் என்பவற்றின் சாரம் என்பர். இந்த ஆகமங்கள் நந்தியெம்பெருமானுக்குக் கிடைத்தவை என்று 62 - ம் பாடல் பகரும். ''தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்'' என்றமையால் இவர் பாடியருளியவை மூவாயிரம் பாடல்கள் என்பது போதரும். இந்நாளில் அச்சிட்ட நூல்களிற் காணப்பெறும் மிகைப்பாடல்கள் இடைச் செருகல் களாம்.

2. சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் அருளப்பெறுவதற்கு முன் தமிழில் அமைந்த சாத்திர நூலகத் திகழ்ந்தது திருமந் திரமே யாகும்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே (115)

என்ற திருமந்திரம் அறிவு நூல் பிழிவு என்பது தெளிவு.

முதல் தந்திரத்தில் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐம்பெருந் தொழில்கள் பற்றியும், மூவகைச் சிவவருக்கம் பற்றியும், மூன்றும் தந்திரத்தில், அட்டாங்கயோகம், அட்டமாசித்திகள் பற்றியும், ஐந்தாம் தந்திரத்தில் சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நாற்பாதமும், சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம் தாசமார்க்கம் எனும் நான்குவழிகளும், பயனாய சாலோக சாமீப சாரூப சாயுச்சியம் என்பனவையும், சத்தி நிபாதம் பற்றியும் கூறப்பெற்றன. ஆறும் தந்திரத்தில் சிவகுரு

தரிசனம் திருவடிப்பேறும் சிவவேடம், பக்குவன் அபக்குவன் முதலியனவும் கூறப்பெற்றன. ஏழாந்தந்திரத்தில் இலிங்க பேதங்கள் பற்றியும் சிவபூஜை குருபூசை மாகேசுவரபூசை பற்றியும்; எட்டாம் தந்திரத்தில் அவத்தைகள் பதிபசு பாசம் வேறின்மை, தத்துவமசி வாக்கியம், பக்தியுடைமை பற்றியும், 9 – ம் தந்திரத்தில் திருவைந் தெழுத்து சிவானந்தக்கூத்து, மறைபொருட்கூற்றுக்கள், அணைந்தோர் தன்மை முதலியன பற்றியும் உள்ளன.

3. மக்கள் அறிப வேண்டிய நீதிச் செய்திகளும் இந்நூலில் கூறப்பெற்றன. யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, வானச்சிறப்பு, தானச்சிறப்பு, அறஞ் செயான் திறம், அறம் செய்வான் திறம், அன்புடமை, கல்வி, கல்லாமை, நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை முதலியனவாம்; இவை இல்லறத்தார்க்கும் துறவிகட்கும் பொது.

4. நாடாளும் அரசனுக்கும் இந்நூலில் அறிவுரைகள் உண்டு அரசாட்சி முறை, திருக்கோயில் முதலிய தலைப்புக்களில் கூறப் பெற்றுள்ளன.

"வேடநெறி நில்லார் தம்மைவிறல் வேந்தன்
வேடநெறி செய்தால் வீடதுவாமே" (செ: 240)
"ஞானிகளாலே நரபதி சோதித்து
ஞானமுண்டாக்குதல் நலமாகும்" (செ: 242)

என்றவற்றுள் அரசன் கடமை கூறப்பெற்றது.

5. மந்திரம் என்ற பெயருக் கேற்ப இந்நூலில் திருவம்பலச் சக்கரம், திரிபுரை சக்கரம், ஏரொளிச் சக்கரம், சாம்பவிமண்டலச் சக்கரம், நவாக்கரி சக்கரம், முதலிய சக்கரங்கள் பற்றிய செய்திகள் பலவுண்டு. இதோபதேசம் என்ற தலைப்பில் எப்பெற்றியினருக்கும் கூறும் நன்னெறிகள் பல கூறப்பெற்றன.

ஒன்றேகுலமும் ஒருவனே தேவனும், நன்றேநினைமின்;
வல்லபரிசால் உரைமின்கள் வாய்மையை;
இறக்கின்ற காலத்தும் ஈசனையுள்ளும்;
முத்தமிழ் ஓசையை எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை

என்பன காண்க.

(வளரும்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

வாடா மல்லிகை

டாக்டர் சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச் டி.,

காட்சி 3

இடம் :- திருமுனைப்பாடி அரசர் நரசிங்க முனையர் அரண்மனை.

உறுப்பினர் : அரசி அமுதவல்லி, பணிப்பெண், தவமூதாட்டி.

(அரசி அமுதவல்லி தனிமையில் சிந்தனையில் மூழ்கி இருக்கின்றார்)

அரசி : (தனக்குள்) என்ன உலகம்! என்ன வாழ்க்கை! ... ...ஆண்டுகள் தாம் எவ்வளவு வேகமாக உருண்டோடிவிட்டன! மன்னர் பெருமான் உலகை விட்டுச்சென்று பத்தாண்டுகளா ஓடிவிட்டன! என்னால் நம்பவே முடியவில்லை ... ...அந்தப் பிரிவை! ... என்னை அணுஅணுவாக உதைத்துக் கொண்டிருக்கும் அந்தப் பிரிவை! ... உலகத்தை விட்டுப் பிரியும் முன்பாக என்னை அழைத்துக் கண்ணீர் ததும்ப அரசர் பெருமான் உரைத்த அந்த வார்த்தைகள்! ... ...

மன்னர் குரல் : இம் ...... அமுதவல்லி! அமுதவல்லி! அழாதே அமுதவல்லி! அழாதே! உன் கண்ணில் நீர் வழிந்தால் ...... என்னால்தாங்க முடியாது அமுதா தாங்கவே முடியாது!

அரசி : சுவாமி? ...... (தேம்புதல்)

மன்னர் குரல் : சிவ பராக்கிரமனுக்கு மழவர் நாட்டு இளவரசியை ...... மணம் முடித்துவிட்ட மனநிறைவோடு ...... நான்...... கண்ணை மூடுகிறேன்! ...... சிவபெருமானே! என் செல்வங்களைக் காப்பாற்று! திருவருட் செல்வராகி விட்ட நம்பி யாரூரரை இடையில் சிலமுறை சந்தித்தாலும் ...... என் மனத்தின் அடியில் ஏதோ ஒரு குறை ...... ஏதோ ஒரு குறை

...... (பெரு மூச்சுவிட்டு) அந்தப் பெண் ...... புனிதவதி...... திலகவதியார் சென்ற தவப்பாதையிலே தன்னை திருத் தொண்டிற்கென்றே அர்ப்பணித்துக் கொண்ட அணையா விளக்கு ...... புனிதாவை ஒருமுறை பார்க்க முடியவில்லையே என்ற குறை ...... கன்னிமாடம் ஒன்றமைத்து அங்குத் தன்னந்தனியே தவமும் தியானமுமாக இருக்கும் புனிதாவை ...... ஆ ...... ஆ...... ஓம் நமசி...... வா...... ய ...... ஓம்......

அரசி : (உணர்ச்சி ததும்ப) கடைசியிலும்கூட மன்னருடைய மனத்தில் இடம் பெற்ற புனிதவதியை ஒருமுறை அரண்மனைக்கு அழைத்து வரவேண்டும்!

[பணிப்பெண் வருகை]

பணி : மகாராணியார்க்கு வணக்கம்; தங்களைப் பார்க்க ஒரு தவ மூதாட்டி வந்திருக்கின்றார்!

அரசி : (வியப்புடன்) தவ மூதாட்டியா? ...... அழைத்து வா! ...... வேண்டாம், இதோ நானே வருகின்றேன்!

[எழுந்து வரவேற்கின்றபோது]

வரவேண்டும், மூதாட்டியாரே, வரவேண்டும்!

தவ : அரசியார்க்கு வாழ்த்துக்கள்! ...... சிவாய நம! சிவாய நம! அமருங்கள்! சிவாயநம!

அர : தாங்கள் எழுந்தருளுவதற்கு நான் பெருந்தவம் செய்திருக்கிறேன், தாயே!

தவ (கண்கள் மலர) என்னைத் தெரிகிதா, மகாராணி!

அர : தங்களை ...... தங்கள் குரலை ...... ஆம்; ஆம்; புத்தூர்ப் புனிதவதியா? ...... நான் காண்பது கனவா? ...... நான் காண்பது கனவா? (மகிழ்ந்து) தாயே! தாங்கள் ...... தாங்கள் ......

தவ : ஆம் அரசி! புனிதவதிதான்! தலயாத்திரை முடித்துத் திரும்பியிருக்கின்றேன்! சிவபிரான் வீற்றிருக்கும் திருத்

தலங்களைக் கண்ணாரக் கண்டு புத்தூர்க்குத் திரும்பிக் கொண்டிருக்கிறேன்! இடையில் மன்னர் நினைவும் தங்கள் நினைவும் ஊடாடின!

அர : தங்கள் புனிதமான உள்ளத்தில் எங்கள் நினைவும் இடம் பெற்றதா, நன்றி. அம்மா, நன்றி!

தவ : மகாராணி! இளைய மன்னரும், வாழ்க்கைத் துணைவியாரும் நலமாக இருக்கின்றார்களா?

அர : ஆம் தாயே! மழவர் நாட்டிற்கு இருவரும் சென்றிருக்கிறார்கள். உடன் அன்பு மகள் புனிதவதியும் சென்றிருக்கின்றாள்!

தவ : (மகிழ்ந்து) அப்படியா?

அர : ஆம். தன் ஒரே மகளுக்குப் புத்தூரில் மலர்ந்த தெய்வ மலரின் திருப்பேரைத்தான் என் மைந்தன் சூட்டியிருக்கின்றான்! தங்கள் நினைவாக! ... தங்களை எப்போதும் நாங்கள் போற்றுவதாக.

தவ : சிவாயநம! (எழுந்து) சிவாயநம! மகாராணி! தங்கள் அன்பப் பணிகள் ஓங்குக! திருநாவலூர், திருவெண்ணெய் நல்லூர், அருட்டுறை வழிபாடுகளை முடித்துக்கொண்டு- இறுதியாகப் புத்தூர் செல்லுவேன்! வருகிறேன் மகாராணி! எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருள் தங்களைக் காப்பாற்றட்டும்! சிவாய நம! சிவாய நம!

(செல்லுகின்றார். செல்லும் திசையினையே நோக்கிக் கொண்டிருக்கும் அரசியின் கண்ணீர்த் துவலைகள்)

அர : ஆ ... கா! என்னே புனிதவதியாரின் தவவாழ்க்கை! இறைவனுக்கே தாயாகிவிட்டார் அந்தப் புனிதவதியார்! எல்லா உயிர்க்கும் தாயாகித் தவநெறி நோற்கின்றார் இந்தப் புனிதவதியார்! இமயமுதல் குமரிவரை இந்தப் பரந்து விரிந்த இப்பாரத நாடு இப்படிப் பட்ட தூய மங்கையர்குல மாணிக்கங்களால் அல்லவோ ஆன்மீக ஒளியில் தலை நிமிர்ந்து நிற்கின்றது!

(கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.)

காட்சி 4

இடம் : புத்தூர்ச் சிவன்கோயில்

காலம் : வைகறை

உறுப்பினர் :புனிதவதி, வேதியர்

[சிவலிங்கப் பெருமானுக்கு வழிபாடு செய்து கொண்டிருக்கின்றாள் புனிதவதி]

புனித : தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தி செய்து, விரும்பும் இந்த ஏழைப் பெண்ணின் வாழ்க்கை சலித்துவிட்டது! ஐயனே, சலித்துவிட்டது! செந்தமிழால் உன்னைப் பாடிப் பரவும் நம்பி ஆரூரரின் திருவடி நினைவுடன் தமிழ்நாடு முழுதும் தலயாத்திரை செய்து உன்னைக் கண்ணாரக் கும்பிட்டேன்; கும்பிட்ட பயன் இன்று கொள்ளும் நேரம் வந்துவிட்டது! ஆம்; போதும் ஐயனே, போதும்! இனி இந்தப் பூத உடலை உன் சேவடியிற் சேர்த்துக்கொள் தலைவா!

''ஒருவனைப் பற்றி ஒரகத்திரு'' என்ற ஒரு மொழிபற்றி உலகிடை வாழ்ந்த பேதை நான்! உன் விளையாட்டிலே கருகிவிட்ட சின்னஞ்சிறிய மல்லிகையாக உன் நினைவிலே வாழ்ந்த நான் இதோ இன்று ... வாடும் மல்லிகையாகத் துவண்டு கொண்டிருக்கின்றேன்!

பெருமானே! இதே புத்தூரில்தான் ... அவரை என் கண்கள் மணப்பந்தலில் முதன்முதலாகக் ண்டன! கண்வழியே கருத்துள் புகுந்தவரைக் கண்ணிமைக்கும் நேரத்தில் விதி தட்டிப் பறித்து விட்டது! அதே புத்தூர்க்கு இதோ ... திரும்பி வந்து விட்டேன்!

(தேம்புகின்றாள்)

இங்கே ஓமகுண்டம்: விண்ணை அளாவிய திருமணக் கொட்டகை; வெள்ளமாகத் திரண்டிருந்த வேதியர் கூட்டம்; அக்கினி சாட்சியாக என்னை மணமாலை சூட்டி ஏற்க இருந்த என் தெய்வம்! ஆம்! இதோ ... இப்போது என் கண்முன் எல்லாம் தெரிகின்றன! ஆனால் ... ஆனால் ...

(நெடுமூச்சு) அந்த வாழ்க்கை ... மண வாழ்க்கை தான்! ... தலைவா! கொன்றை சூடிய குருமணியே! அம்மையப்பா! ... உன் திருவடியில் இந்த மலரை சேர்த்துக்கொள்! ... சிவாய நம! ... சிவாய நம! ... (சிவலிங்கப் பெருமானைத் தழுவியபடியே புனிதவதியின் உடல் சரிகின்றது; காற்றிலே அசைந்த கொன்றை மரத்தின் மீதிருந்து தங்கநிற மலர்கள் உதிர்ந்து புனிதவதியின் மீது பொன்மழையென மூடுகின்றன.

(புத்தூர் வேதியர் ஒருவர் வழிபட வருகின்றவர் திடுக்கிடுகின்றார்)

வேதியர் : யார் ... அது? நம் சடங்கவி வேதியர் மகள் புனிதவதி போல் அல்லவா இருக்கிறாள்? ... ஆ! ஆம்; அவளே தான்; தலயாத்திரையாகச் சென்றிருந்த புனிதவதி இறுதியில் புத்தூருக்கே திரும்பிவிட்டாள்! அது மட்டுமா! தேவதேவனின் திருவடியில் வாடா மலராகத் தன் வாழ்வை முடித்துக் கொண்டுவிட்டாள்! என்னே இப்பெண்ணின் வாழ்க்கையின் ஏற்றமும், சிறப்பும்! எல்லாம் எம்பெருமானின் திருவருள்! [பின்னணியில் சோகஇழை நாத வெள்ளமாய்ப் பரவுகிறது]

குரல் :

''அமலோர் தவம் முயல்வார் பிறர்
அன்றே மணம் அழியும்
செயலால் நிகழ் புத்தூர் வரு
சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனி நாதனை
ஒழியாது உணர் வழியில்
பெயராது உயர் சிவலோகமும்
எளிதாம் வகைபெற்றாள்''

[பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம் - 77 ஆம் பாடல்]

[முற்றும்]

★★
★

திருமூலர் திருமந்திரம்

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.,

புகலிடத்தில் போதவிட்டான்

மூன்ருவது பாடலில் உயிர்களோடு உடனுய் விளங்கும் இறைவனைப் போற்றிய திருமூலர் நான்காவது பாடலில் இறைவன் உயிர்களுக்குப் புகலிடமாக இருந்து அருள் புரிவதை நினைக்கிருர். ஆண்டவனைத் தவிர ஆன்மாக்களுக்குப் புகலிடம் ஏது? ''பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைந்துள்ள'' பரம்பொருள் குழந்தைகளுக்குப் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'', காப்பாற்றும் புகலிடமாகத் திகழ்வதை நினைக்கிருர் திருமூலர்.

அகலிடத் தார் மெய்யை,
அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றனைப் போதவிட்
டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந்
தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின
றேனே. (4)

என்ற பாடல் அருள்வாக்காக மலருகிறது. பரந்த மனமுடைய பெருங்கருணையாளர்களுக்கு இறைவன் மெய்ப்பொருளாகத் தோன்றுகிருன். நாம் பிறர்க்கு உதவினுல் இறைவன் நமக்கு உதவுகிருன். ஆற்றிலே தண்ணீர் வெள்ளமாகப் போகிறது. குடம் கொண்டு சென்றவன் குடத்தளவு தண்ணீர் எடுத்துப் போகிருன். அதுபோல இறைவன் கருணையையும் நம் மனத்தளவுதான் நாம் உணரமுடியும். அகன்ற மனமுடையார்க்கு மெய்ப்பொருளாக இருக்கும் இறைவன் அண்டத்துக்கு வித்தாக (விதையாக) இருக்கிருன். அவனுல் விதையில்லாமலே முளைக்கவைக்க முடியும்.

விச்ச தின்றியே விளைவு
செய்குவாய்
விண்ணு மண்ணகம் முழுதும்
யாவையும்
வைச்சு வாங்குவாய்

என்று மணிவாசகரும்,

வித்தொன்று மின்றியே
விளைவெலாம் தருகின்ற
விஞ்ஞான மழைசெய் முகிலே.

என்று வள்ளலாரும் பாடுவது போல, வித்தில்லாமலேயே அண்டங்களை உண்டாக்கும் ஆண்டவன், தானே விதையாக நிற்கும் தகைமையாளனுய்க் காட்சி தருகிறுன்.

கரை காண முடியாத கடலில் கப்பல் போய்க்கொடிருக்கிறது. கப்பலின் மேல்தளத்தில் ஒரு புரு இருந்தது. திடீரென்று புரு, பறக்கத் தொடங்கியது. கரைக்குப் போக ஆசை. எல்லாப் பக்கமும் பறந்து பார்த்தது. கடல்தான் இருந்ததே தவிரக் கரையில்லை. எல்லாப் பக்கமும் சுற்றிய புரு இறுதியில் கப்பலின் தளத்துக்கே மீண்டும் வந்தது. இது போல ஆன்மாக்கள் பதவி, பணம், பாசம் என்று எங்கெங்கே போனுலும் இறைவன் திருவடியாக இருந்து பிறவிப் பெருங்கடலில் கரைசேர்க்கும் கப்பலுக்கே மீண்டும் வர வேண்டும். ''எங்கும் போய்க் கரைகாணுது எறிகடல்வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை'' மனிதன் தான்; இந்த மனிதப் பறவைக்குப் புகலிடமாய் நின்று, நானே புகலிடம் என்று அறிவித்து, தன்னை நோக்கிவரச் செய்தவன் ஆண்டவன். அடைக்கலமான இடத்தில் ஆன்மாவைச் செல்லவிட்டவனே, புகலிடத்து என்றனைப் போதவிட்டான் என்று திருமூலர் குறிக்கும் இறைவன். இவ்வளவு கருணை செய்த இறைவனை எப்பொழுது வழிபட வேண்டும்? பகலில் மட்டுமா? இரவில் மட்டுமா? இமைப்பொழுதும் நம் நெஞ்சில் நீங்காத பெருமான் நமக்குச் செய்துள்ள நன்மைகளுக்கு. அவனை வணங்கினுல் மட்டும் போதுமா? அவன் கருணைக்கு நாம் என்ன கைம்மாறு செய்யலாம்? நம் தோலையே செருப்பாகத் தைத்துப்போட்டால்கூட, அவன் கருணைக்கு அது போதிய கைம்மாறு ஆகாதே! அவனை அவன் தந்த தலையாலே வணங்குவோம். பகலிலும் இரவிலும் பணிந்து வழிபடுவோம். அப்படி வழிபட்டால் ஒளியை வழிபட்டால் ஒளி பெறுவது போல, மாறுபாடுடைய இந்த உலகில் அறியாமை இருளை நீக்கி அறிவொளி பெறலாம்.

சிவனுடொக்கும் தெய்வம்

தனக்குவமை இல்லாதான் இறைவன். உயிருக்கு உயிராக நிற்பவன் அவன். ஊன் கண்ணுக மட்டுமின்றி உளக்கண்ணுகவும் நின்று பார்க்கச் செய்தவன் அவன்.

ஒழியாத புவனத்
துயிர்க்குயிரதாய் நிற்பது
ஒருதெய்வம் உண்டெனஎடுத்து
உரையால் உணர்த்துவதை ஒழிய
எவரெவர்கட்கும்
ஊன்கண் உளக்கண்ணதாம்
விழியாக முன்னின்று தண்ணளி
சுரந்தவர்கள்
வேண்டிய வரங்கொடுப்பான்

மெய்கண்ட தெய்வமித்
தெய்வமல் லால்புவியில்
வேறில்லை என்றுணர்தியால்.

என்று குமரகுருபர சுவாமிகள் பாடுவது போல மெய்கண்ட தெய்வமாக விளங்கும் இறைவனுக்கு யார் சமமாக முடியும்? அவனால் படைக்கப்பட்ட கதிரவனுக்கே ஈடிணையில்லையென்றால் அந்தக் கதிரவனைப் படைத்த கருணைக் கடலுக்கு ஈடிணையுண்டா? புறஉலகில் தேடினாலும் சிவனோடு ஒக்கும் தெய்வம் இல்லை. அகத்தினுள்ளே தேடிப் பார்த்தாலும் அவனோடு ஒப்பார் யாவரும் இல்லை. புவனமாகிய உடம்பைக் கடந்து பொன்னொளி வீசும் பொன்னார் மேனியன் அவன். அந்தப் பெருமான் செம்மை நிறமான சடைமுடித் தாமரை எனப்படும் சகஸ்ராரத்தில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரையில் விளங்குகிறான்.

சிவனொடொக்கும்தெய்வம்
தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு
யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி
மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை
யானே. (5)

என்பது ஐந்தாவது திருமந்திரம். உள்ளே தேடினாலும் புறத்தே தேடினாலும் சிவபெருமானுக்கு இணையான தெய்வங்களைக் காண முடியாது அவ்வளவு அரியவனான பொன்னார் மேனியன் நம் உச்சந் தலையில் உள்ள சகஸ்ரார தளம் (பிரமரந்திரஸ்தானம்) என்ற இடத்தில் ஆயிரம் இதழ்த் தாமரை வடிவாய் ஒளி வீசுகிறான். நம்மிடத்தில் உள்ள பெருமானை வேறு எங்கும் தேடவேண்டுமா? திருமாலும் நான்முகனும் தேடிக் காணமுடியாத சிவபெருமானை நம்முள்ளே தேடிக் கண்டு கொள்வோம் என்பதே இப் பாடலின் பொருளாகும்.

அவனன்றி மூவரால்
ஆவதொன்றில்லை

ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்பவன் சிவபெருமான். நமக்கு இவை கடினம். அவனுக்கோ விளையாட்டு. இந்த "அலகிலா விளையாட்டி" ற்கென அவனே பிரமன் திருமால் உருத்திரன் என்ற மூவரை உண்டாக்கினான்; அவன் ஆணையிட அவர்கள் செயல்படுகின்றார்கள். அவனில்லாவிட்டால் அவர்கள் சயல்பட முடியாது. "சாட்டி நிற்கும் அண்டமெல்லாம் சாட்டையிலாப் பம்பரம் போல் ஆட்டி வைக்கும்" ஆண்டவன் சிவபெருமான். அவன்

"தேவர்கோ அறியாத தேவ
தேவன்;

செழும்பொழில்கள் பயந்துகாத்
தழிக்கும் மற்றை
மூவர்கோ னய்நின்ற முதல்வன்''

அவனைவிட மேம்பட்ட தேவர்கள் இல்லை. எனவே ''சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல் லோம்'' என்றபடி வேறு தேவரை நினைந்து பாழுக்கிறைக்க வேண்டாம். அவனே தவமாக வும் தவத்தின் பயனாகவும் இருப் பதால் அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை. அவனைத் தவிர நமக்கு வீடுபேறு (ஊர்) தருவார் யாருமில்லை? ஏன்? மற்றவர்கள் காலத்திற்கு உட்பட்டவர்கள். அவன் மட்டுமே காலம் கடந்தவன்.

நூறுகோடி பிரமர்கள் நுங்கினர்;
ஆறு கோடி நாராயணர்
அங்ஙனே:
ஏறு கங்கை மணல் என்னில்
இந்திரன்;
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே.

என்ற அப்பர்பெருமான் அருள் வாக்கின்படி, காலம் கடந்த சிவ பிரான் மட்டுமே நமக்கும் காலங் கடந்த வீடு பேற்றைத் தர முடியும்.

அவனை ஒழிய அமரரும் இல்லை;
அவனன்றிச் செய்யும் அருந்தவம்
இல்லை;
அவனன்றி மூவரால் ஆவதொன்
றில்லை;
அவனன்றி ஊர்புகும் ஆறறி
யேனே. (6)

சிவபெருமானே உயிர்களுக்கு வீடுபேறு தரவல்லவன் எனத் திட்டமாக உணர்த்துவது இப்பாடலின் குறிக்கோள் ஆகும்.

(வளரும்)

திருப்பணி கொள்ளும் திருநாரையூர்

தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் திருநாரையூர் அருள்மிகு சுயம்பிரகாச சுவாமி ஆலயத்திருப்பணி வேலை திருப்பனந்தாள் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அருளாசியினல், துன்மதி ௵ தைமீ 30௳ [12—2—82] அன்று துவக்கப்பெற்று சிதம்பரம் திரு G. வாகீசம்பிள்ளை அவர்களைத் திருப்பணிக் கமிட்டி தலைவராகக்கொண்டு நடைபெற்றுவருகின்றது; அன்பர்கள் திருப்பணிவேலைக்குத்தாராளமாக நன்கொடை அளித்து ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாரின் அருளுக்குப் பாத்திரராகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

S. திருநாவுக்கரசு பிள்ளை,
பொருளாளர்,
திருப்பணிக்கமிட்டி,
9, கனகசபைநகர், சிதம்பரம்.

நூல் நிறை

சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ்

[பதிப்பாசிரியர்: வித்துவான் வி. மு. சுப்பிரமணிய அய்யர், எம். ஏ. பி. ஓ. எல்; பக்கம்- (8 + 37 + 92) 137; வெளியீடும் கிடைக்குமிடமும்: மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலையம்; திருவான்மியூர், சென்னை, 600 041; விலை ரூ. 7]

'குழவி மருங்கினும் கிழவ தாகும்' இது பிற்கால பிள்ளைக்கவி இலக்கிய மரபுக்கு அடிப்படை;

நூலாசிரியர் பெருவள்ளல் — பெயர் விழையாததால்;
காப்புப் பகுதியில் 'திருநீறு' — புதியது;

நூலின் அம்புலிப் பருவம் சிறப்புடையது; பேசும் உலாவில் பெதும்பைப் புலி; பிள்ளைத்தமிழ்க் கம்புலி புலி- எனும்மொழி நிறுவப்படுகிறது.

பெயர் விழையாதவராயினும் ஆசிரியர் 'சுந்தரர் செந்தமிழில்' விழைவுடையவர்; அதனைப் பல இடங்களிலும் அறிய முடிகிறது:

நாங்கூர்ப் பதியும், ஆங்குறைந்த வேளாளரும் போற்றப் பெறுதலைக் காணமுடிகிறது.

துவாத சாந்தவெளி, வஞ்சிக் கொடியே, துரியங் கடந்த பரநாதத் தொளியே - இவை கொண்டெடுத்து மொழிந்தவை;

ஆசிரியரின் வடமொழிப் பற்று நூலெங்கும் பரவிக் காணப் படுகிறது.

கரதலாமலகம், ஆச்ரயிக்கத் தக்கவள் - முதலான உரைத் தொடர்கள் ஒரு சிலர்க்கே எளிமையாகப் புரியும்.

பிற பிள்ளைத்தமிழ் பற்றிய குறிப்புகள் பொருத்தமுற இட னறிந்து ஒப்பிட்டுக் காட்டப் பெறுகின்றன; பெரியதான முன்னுரை பிள்ளைக்கவி பயிலப் புகுவார்க்கு அரிய வரப்பிரசாதம்.

நூலின் முழுநிறைவுக்கு அதன் புறப்பகுதிகளும் காரணம்.

பெண்பால், ஆண்பால் பிள்ளைத்தமிழ்கள் பட்டியல் தொகுக்கப் பெற்றுள்ளமை புதியது; டாக்டர் அய்யரவர்கள் நூலகப் பதிப்பென் பதால் அதுவும் அதன் மரபுநெறிப்பட்ட வழிகாட்டலாகவே அமையும்.

நூலின் முன்பகுதியில் அமையும் ஆங்கில விளக்கம் ஆழ முடையது; தொல்பொருள்துறைப் பேரறிஞரின் அறிவுக்கொடை என்பதால்.

3 – ஆம் பக்கத்தின் (iii) அடிக்குறிப்பைப் பாராதவர்க்குப் பதிப்பாசிரியர் யாரென்ற குழப்பம் நீங்காது; வித்துவான். திரு. பாலசாரநாதனின் இடனறிந்து சொல்லுதல் வன்மையும் புரியாது.

நடுவண் அரசுக்கு நாமும் நன்றி செலுத்துவோம்.

'குமாரலிங்கர் குறவஞ்சி'

[பதிப்பாசியர்: வித்துவான் சு. பாலசாரநாதன்: பக்கம்:– (6+22+60) –88; இதுவும் ஐயரவர்கள் நூலக வெளியீடே; விலை: 6]

நாட்டுப்புற வாழ்வியலிலிருந்தும் நற்றமிழ்ப் பிரபந்தம் உருவாக முடியும் என்பதை நிறுவியவை 'குறவஞ்சி' இலக்கியத் தொடர்கள்.

பதிப்புத் துறை அனுபவ முதிர்ந்த தமிழ்ப் புலவரின் தனி வண்ணங் கலந்து நூலக 69 - வது வெளியீடாக மலர்கிறது இந் நூல்.

'The name of the author - of this Kuravauchi is not known' எனும் தொடரில் நம் மனக்குறையையும் பிரதிபலிக்கச் செய்கிறார் முன்னுரையாசிரியர். இசைக் கூறுகளும் எடுத்துச் சொல்லப் பெற்றுள்ளன.

ஈசர்முடி மேலிருந்து வாசமுகம் பெற்றுநேசமுடன் காயும் நிலவுப் பெண்ணை நிந்திக்கும் பகுதி - அருமையானது.

அன்னையின் அருங்குணங்கள் பிள்ளைக்கு அமையக் காரணம் என்ன? விடை; 'தாய் முலைப் பாலுண்டா லல்லோ குணம் வரும்' இது, செயற்கைக் குழந்தையுணவு விளம்பரங்கட்கு முன்னரே அளித்த பதிலடி. நிசார், மகராசன், துரை, சாமி, மரியாதை, தோசை, சேலைக்காரி, மனு - எனும் பிறமொழிச் சொற்கள் நூலின் காலத்தால் விளைந்த தாக்கங்கள்.

பாட்டுடைத் தலைவனாகிய குமாரலிங்க நாயக்கரின் கீர்த்தியைக் கீர்த்தன வடிவோடு, தீன ரட்சகனாகக் காட்டுகிறது.

வட சொற் பயில்வுக்கு காலமே காரணமாகலாம். பழமொழி வழக்கு பயில்கிறது.

நாயக்கரின் புகழ் பேசுமிடத்தில் 'அரசு செய் லோலன்' எனும் பிரயோகத்தின் பொருள் சிந்தனைக்குரியது;

இதையொத்த பிற வெளியீடுகளைப் போல இதனுள்ளும் பிற குறவஞ்சி இலக்கியங்களின் கூறுகள் கொண்டுஉரைக்கப் பெற்றுள்ளன.

ஐயரவர்கள் நூலக வெளியீட்டில் முகப்பு அட்டைப் படம் காண வியப்பு உண்டாகும்; அது நூல் இயல்பு உணர வேண்டிய நுண்மைக் காகவே என்று துணிவோம்.

பனசை, முருகு. சுவாமிநாதன்.

திருக்கணித பஞ்சாங்கம்

தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

ருத்ரோத்காரி-ஆவணிமீ (1983 - ஆகஸ்டுமீ - செப்டம்பர்மீ)

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

தமிழ்வ		ஆங்கிலவ	கிழமை	திதி	நட்சத்திரம்
1		17	புதன்	நவமி [illegible]–19	கேட்டை நாள் முழுதும்
			(சிம்மத்திற்கு சூரியன் 7-36)		
2		18	வியாழன்	தசமி 8-50	கேட்டை 6–50
					தனுசு சந்திரன் 6-50
3		19	வெள்ளி	ஏகாதசி 10-50	மூலம் 9-24
4		20	சனி	துவாதசி 13-09	பூராடம் 12-16
					மகர சந்திரன் 19·00
5	ரு	21	ஞாயிறு	திரயோதசி 15–37	உத்திராடம் 15·16
6	ஓ	22	திங்கள்	சதுர்த்தசி 18–06	திருஓணம் 18-18
7	௬	23	செவ்வாய்	○பௌர்ணமி 20–29	அவிட்டம் 21-15
	ஜீ				கும்ப சந்திரன் 7-47
8		24	புதன்	பிரதமை 22–43	சதயம் 24–02
9		25	வியாழன்	துதியை 24–44	பூரட்டாதி 26–36
					மீன சந்திரன் 19–59
10		26	வெள்ளி	திரிதியை 26-28	உத்திரட்டாதி 28-54

11		27	சனி	சதுர்த்தி 27-51	ரேவதி நாள் முழுதும்
12		28	ஞாயிறு	பஞ்சமி 28-49	ரேவதி 6-52
					மேஷ சந்திரன் 6-52
13		29	திங்கள்	சஷ்டி 29-17	அசுவனி 8-24
					கிழக்கே சுக். உதயம் 12-53
14		30	செவ்வாய்	சப்தமி 29-10	பரணி 9-26
					ரிஷப சந்திரன் 15-37
15		31	புதன்	அஷ்டமி 28-25	கார்த்திகை 9-54
16		1	வியாழன்	நவமி 26-59	ரோகிணி 9-43
					மிதுன சந்திரன் 21-23
17		2	வெள்ளி	தசமி 24-55	மிருகசீரிஷம் 8-52
18		3	சனி	ஏகாதசி 22-15	திருஆதிரை 7-24 } புனர்பூசம் 29-21 }
					கடக சந்திரன் 23-54
19		4	ஞாயிறு	துவாதசி 19-05	பூசம் 26-50
20		5	திங்கள்	திரயோதசி 15-34	ஆயில்யம் 24-02
					சிம்ம சந்திரன் 24-02
21		6	செவ்வாய்	சதுர்த்தசி 11-50	மகம் 21-05
22		7	புதன்	அமாவாசை 8-05 } பிரதமை 28-29 }	பூரம் 18-12
					கன்னி சந்திரன் 23-30
	ர்	8	வியாழன்	துதியை 25-15	உத்திரம் 15-34
24	ப		வெள்ளி	திரிதியை 22-32	அஸ்தம் 13-23
	ம்				துலா சந்திரன் 24-31
25	ட	10	சனி	சதுர்த்தி 20-30	சித்திரை 11-49
	ப்				விநாயக சதுர்த்தி
26	ச	11	ஞாயிறு	பஞ்சமி 19-15	சுவாதி 11-00
	ெ				விருச்சிக சந்திரன் 28-56
27		12	திங்கள்	சஷ்டி 18-53	விசாகம் 11-02
28		13	செவ்வாய்	சப்தமி 19-21	அனுஷம் 11-54
29		14	புதன்	அஷ்டமி 20-37	கேட்டை 13-33
					தனுசு சந்திரன் 13-33
30		15	வியாழன்	நவமி 22-29	மூலம் 15-51
31		16	வெள்ளி	தசமி 24-47	பூராடம் 18-37
					மகர சந்திரன் 25-21

சைவத் திருமுறைகளும் சமுதாய நெறிமுறைகளும்

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்.

இறை இலக்கணத்தை நன்கு புரிந்துகொண்டு அவ்விடத்திலே அன்பு செய்தால்தான் நன்மை என்று இல்லை. அவ்வளவு தூரம் வேலையில்லை. ''தமிழ் விரகனது உரை நலம்மலி ஒருபதும் நவில்பவர்'' பயனடைவர். இதற்கு மேலே இருக்கிற பத்துப் பாட்டைப் படித்தால்,

''நிகழ் குலம் நலநிறை திருஉரு நிகரில கொடைமிகு சயமகள் புகழ்புவி வளர்வழி அடிமையின் மிகைபுணர் தரநலம் மிகுவரே'' என்று அந்தப் பாட்டுப் போகிறது.

ஒரு பையனிடம் சொல்கிறார், நீ ஐ. ஏ. எஸ். பரீட்சைக்குப் போனால் நல்லது என்று அதனுடைய பயனைச் சொல்லி மொத்தம் 9 தாள், 3 பாடம் நீ படிக்காதது என்று சொன்னால், ''சார், அது வேண்டாம் சார், இருப்பதே போதும்'' என்பான். ஆகவே அவனை உண்மையாக ஈர்க்க வேண்டுமானால் எவன் எவனோ போய் ஐ. ஏ. எஸ். எழுதிவிட்டு வருகிறான், I. A. S. appeared என்று கடைசி வரையில் சொல்லிக் கொண்டிருக்கிறான்; நீ ஏண்டா போகக் கூடாது என்று சொல்லி ஈர்க்க வேண்டும்.

அதைப்போல, ஒரே பாட்டிலே, இந்தப் பத்துப் பாட்டைப் படித்தால் போதும், புகழ் வரும்; பிள்ளை வரும்; பணம் கிடைக்கும்; மோட்சம் போகலாம் என்று சொல்லும்போது இறை என்பது கூட முக்கியமல்ல; இந்தச் சமுதாயத்தை ஈர்க்க வேண்டும்; அவர்கள் மனப்பான்மையை மாற்ற வேண்டும்; அவர்களைச் செம்மையான வாழ்க்கை வாழ வைக்க வேண்டுமென்ற அடிப்படையில், ''மண் புகார்; வான் புகுவர்; மனம் மிலையார் பசியாலும் கண்புகார்; பிணியறியார் ... ...'' என்று பாடல் போகிறது. ஒரே பாட்டில் இணைந்த முழுமையான நலங்களையும் சொல்லுவார்; மறுமையும் சொல்லுவார். இதுவும் கிடைக்கும்; அதுவும் கிடைக்கும் என்று சொல்லுவார்.

இனி அடுத்த சிந்தனை வருகிறது. ஏன் ஒவ்வொரு ஊராகப் போனார்கள்? ஞான சம்பந்தர் மயிலாடு துறையில் இருக்கிற சிவபெருமான் வேறு; குடமூக்கில் இருக்கிற சிவ பெருமான் வேறு; இடைமருதில் இருக்கிற சிவபெருமான் வேறு என்று நினைத்தாரா?

"இடரினுந் தளரினுமெனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்"

என்று சொல்கிற ஆட்கள் இவர்கள்.

"வழுக்கி வீழினும் உன் திருப் பெயரல்லால் மற்று நான் பற்றிலேன்" என்று சொல்கிற ஆட்கள் ஊர்ஊராகப் போய் அங்கங்கே கோவிலுக்குத்தான் போனார்கள். அப்படித்தான் தேவாரம் இருக்கிறது; பெரிய புராணம் இருக்கிறது. நானும் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால் அந்தக் கோவிலுக்குப் போய், அங்குள்ள இறைவனைப் பார்க்கிறீர்களென்றால், அந்த ஊரிலுள்ள இறைவன் மற்ற ஊர்களிலுள்ள இறைவனுக்கு மாறுபட்டவனா? இப்போது பண வசதி இருக்கிறது. அலங்கார மாவது வேறு மாதிரி பண்ணிக் காட்டுவார்கள். ஆனால் அவர் கள் போன காலத்தில் வெறும் சிவன் கோவில்தான். லிங்கமும் வித்தியாசமாக இருக்க முடி யாது. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்கி விடும். இவர்கள் போனதன் நோக்கம் கோவிலில் மக்களைக் காண. ஏன்? இறைவன் எங்கும் இருக்கிறான். இந்த இடத்தி லிருந்து இவர்களால் அவனை வணங்க முடியும். ஆனால் எல்லா மக்களையும் பார்க்க முடியாது. When the mountain does not go to Mohamed; Mohamed goes to the mountain.

சமுதாயம் இவர்களை நோக்கி வர முடியாது. இவ்வளவு வசதி இருக்கிற காலத்திலேயே போக முடியவில்லை. யாரோ பெரிய வாளைப் போய்ப் பார்க்க வேண்டு மென்றால் 'ஆமாம், வாஸ்தவம் தான்; போகணும், ஆனால் எங்கே சார் ஒழியுது, என்பான். சொல்லி விட்டுச் சீட்டு ஆடப் போவான். இத்தனையும் இருக்கிற காலத்திலேகூட இதைச் செய்ய முடியவில்லை. போக்குவரத்து வசதி இல்லாத அந்த நாளிலே அந்த மக்கள் இவர்களை நாடி வர வேண்டுமென்றால் நடக்குமா? அப்பூதி அடிகள் திருநாவுக் கரசரிடம் உயிரையே விட்டவர். மறந்துவிடாதீர்கள். தஞ்சாவூரி லிருந்து திருவதிகை போவ தென்றால் கட்டுச் சோறு கட்டிக் கொண்டு போனால்கூட மூன்று நாட்களில் போகலாம். அதற்கு மேலே தூரம் இல்லை. இந்த பிராமணன் அங்கே போக முடிய

வில்லை. அவரைப் பார்க்க முடிய வில்லை. அது தெரியுமா உங்களுக்கு?

பிள்ளை குட்டியிலிருந்து கன்றுக் குட்டிவரை திருநாவுக்கரசர் என்று பெயர் வைத்து உயிரையே விட்டவர். அவர் எங்கிருக்கிறார் என்று தெரிந்து போய் இருக்கலாம் அல்லவா. செய்தித் தொடர்பு இல்லை என்பதற்கு அதுதான் உதாரணம். வாய்ப்பு வசதி இல்லை, அதனால் போக வில்லை. தொடர்பு இல்லாத காலத்தில் வேறு என்ன வழி? இவர், பெரிய திருநாவுக்கரசு, சின்ன திருநாவுக்கரசு, எருமைத் திருநாவுக்கரசு எல்லோரையும் கூட்டிக்கொண்டு அவரிடத்திற்குப் போக முடியாது. ஆகையால் திருநாவுக்கரசர் அவரிடம் வருகிறார். இங்கே சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகத் தேவாரம் பாடியவர்கள் சமுதாயத்திற்காக வாழ்ந்தார்கள் என்பதற்கு இதுவே உதாரணம். இவர்கள் பாடிக்கொண்டே போனார்கள். ஏன் ஐயா இதைச் சொல்லவில்லை? அவர்கள் சமூகவரலாறு எழுத வரவில்லை. ஆகையால் இதைச் சொல்லவில்லை. சமய வரலாறு எழுதினார்கள். அதனால் கோவிலுக்குப் போனார்கள்.

Social history is incidental to his religion

அந்தக் காலத்தில் ஆவண அலுவலகம் கோவில்தான்; பள்ளிக்கூடம் கோவிலில்தான்; சொற்பொழிவு கோவிலில்தான்: சர்க்கரைப்பொங்கல் அன்றையலிருந்து இன்றையவரை கோவிலில் தான். மற்றதெல்லாம் போய்விட்டது., அதுமாத்திரம் மிஞ்சி இருக்கிறது கலை வேண்டுமா, கோவிலில் தான் எனவே கோவிலுக்குப் போனான் என்றால் சமுதாயத்தைச் சந்திக்கப்போனான் என்று அர்த்தம் வருகிறது. கோவிந்தசாமி வீட்டுக்கு ஞானசம்பந்தர் போனால் ராமசாமிக்குப் பிடிக்காது. மகான் வந்திருக்கிறார்; பெரியவர்கள் வந்திருக்கிறார்; ஆனால் அந்த ஆள் வீட்டிற்குப் போய் இருக்கிறார் என்ன சார் அக்கிரமம்; அவருக்கு என்ன தெரியும் இந்தச் சண்டாளனைப் பற்றி என்பான்; இவர் அங்கே போகமாட்டார். ஏனென்றால் அவர் சண்டாளன் என்று தெரிந்தவர். அவரும், இவரும்சமம். ஆகையால் இவருக்குத்தெரியும். வந்தவருக்கு அதைப் பற்றி என்ன தெரியும். அருளாளர்கள் யாராக இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறார்கள்.குலம் தாங்கு நாலிலும் கடைப்பட்ட சண்டாளர்களில் சண்டாளர்களேனும் போகத் தயார் அவர்கள். அதை மறந்து விடாதீர்கள். ஆனால் இவன் ஒத்துக்கொள்ள மாட்டான். கோவிந்தசாமி வீடும் வேண்டாம் இராமசாமி வீடும் வேண்டாம், கோவிலுக்குப் போகலாம் என்று போனார்கள். அப்போது எல்லோ

-ம் போய்ப் பார்க்கலாம். ஏன் இந்த நாயன்மார்களும், அடியார்களும் கோவிலுக்குப் போனார்களென்றால் அங்கேதான் இறைவன் இருக்கிறார் என்பதால் அல்ல. அவ்வளவு பைத்தியக்காரர்களல்ல அவர்கள். சமுதாயம் வந்து தன்னைச் சந்திக்க வேண்டுமானால் விருப்பு வெறுப்பற்ற நிலையிலே, கோவிலிலே இருந்துவிட்டால் யாரும் வந்து சந்திக்கலாம். ஆக அந்த வரலாற்றைப் படிக்கும்போது இதைத்தான் நான் சிந்தித்தேன்.

திருவீழிமிழலை பஞ்சத்தைப் பற்றிச் சிந்திப்போம். திருவீழிமிழலைக்குப் போனவர்களுக்குத் தெரியும். அது தொலைதூரமான ஊர். சதுரமான ஊரல்ல. இன்றைக்கும் அப்படித்தான் இருக்கிறது. இந்த ஊரிலே பஞ்சம் வந்தால், ''மெய்யன்பர்களே உங்களுக்கு இறைவன் மீது நம்பிக்கையில்லைபோல் இருக்கிறது. நீங்கள் ஆழ்ந்து அன்பு செலுத்துங்கள், உங்களுக்குச் சாப்பாடு கிடைக்கு'' மென்று சொல்லியிருந்தால் அதில் தப்பு ஒன்றுமில்லை. அது உண்மையும் கூட. ஆதியிலிருந்து அந்த மாவட்டத்திற்கு அந்தக் குறை இருக்கிறது. ஆகையால் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். ஏன் சொல்லவில்லை? அவர்களைப் பொறுத்தமட்டில் குற்றத்தைச் சொல்ல வரவில்லை. ஏன்? அவர்கள் எந்தத் தலைவனை வழிபடுகிறார்களோ, அவன் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகிப் பிழையை மன்னிக்கின்றவன். ஆகையால் அவனுடைய அடியார்களாகையால் நீ தப்புச் செய்யாதே என்று குறித்துச் சொல்லவில்லை.

ஒருத்தன் பெண் ஒருத்தியை கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். உடன் போதல் என்று கௌரவமாகச் சொல்வது; ஓடிப் போய்விட்டாள் என்று உலகியலில் சொல்வது. அழுகிறாள். கூட்டிக்கொண்டு வந்ததில் தப்பில்லை; அவனைத்தொடாமல் அழுகிறாளாம். அதில் பெருமைப் படுகிறார்கள் சில சைவப் பெருமக்கள். இதெல்லாம் பெரிய புராணத்தில் சொல்லப்படுகிறது. தொடாமல் எட்ட நின்று அழுதாளாம். அப்பன் ஆத்தாளிடம் சொல்லாமல்கூட கூட்டிக்கொண்டு வந்ததில் தப்பில்லை; அவன் செத்துப் போன பிறகு தொடாமல் அழுதாளாம். சைவம் எப்படி துளிர்க்கிறது பாருங்கள். தொடாமலே அழுததாலே அதை நினைக்கிறார் அவர். ஏ பெண்ணே நீ கூட்டிக்கொணடு வந்தது தப்பு என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? அந்தக் கருணை அங்கே எப்படிப் பாய்கிறது.

''சடையா யெனுமால் சரண்
நீயெனுமால்
விடையா யெனுமால் வெருவா
விழுமால்

மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண்
மெலிவே''

தண்ணீர் பாய்ச்சுகிறவன் குவளைக்காகத் தண்ணீர் பாய்ச்சுகிறான்? அவன் வயலுக்குப் பாய்ச்சுகிறான். அதனால் குவளையும் மலர்கிறது. உன்னுடைய பரந்த கருணை இருக்கிறதே அது குற்றம் செய்தவன் செய்யாதவன் அத்தனை பேருக்கும் அருள் செய்கிறதே; அப்படியானால் இவள் எந்தக் குழுவில் சேர்ந்தவள்? குற்றம் செய்யாதவள் குழு இவள். ''சடையா எனுமால், சரண் நீ எனுமால், விடையா எனுமால், வெருவா விழுமால்'' —சரண் நீ என்கிறார். ஆகவே உன்னைச் சரண் என்று வந்தவள் வெறுவி விழுகின்ற நிலைமையிலே நீ அருள் செய்யாமல் இருந்தால் அது இயற்கைக்கு மாறானது. ஏனென்றால் தண்ணீரை நெல்லுக்குப் பாய்ச்சும் போது குவளை மலர்கிறது. தாகூர் சொல்வார் ... ... is still pouring my Lord, my small cup is full: உன்னுடைய அன்பு கருணை மழை பொழிந்து கொண்டே இருக்கிறது. எனக்குத்தான் அதை நுகர வழியில்லை. ஆக அந்தப் பெண்ணைக் குற்றம் சாட்டவில்லை. அவளை வாழ வைக்கிறான். ஆக இவர்கள் சமுதாயத்திலே எவ்வளவு ஈடுபாடு கொண்டார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அது மாதிரி, பஞ்சத்தைப் பற்றிச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கலாம். சொல்லவில்லை. சோறு போட்டார்கள்: அதன் உள்நோக்கைப் பார்த்தீர்களானால் - மகேஸ்வர பூஜை கொஞ்சநாளைக்கு முந்திவரை நிறையப் பண்ணிக் கொண்டிருந்தோம்; இப்போது அதிகம் இல்லை: ஏனென்றால் மகேஸ்வரர்கள் அதிகம் இல்லை. நாமும் அதிகம் பண்ணுவதில்லை அடுத்து நாமே மகேஸ்வரன் என்று நினைத்துக் கொள்வது. அதை நான் சின்ன வயதில் பார்த்திருக்கிறேன்.

(வளரும்)

ஸ்ரீ காசிமடத்தின் புதிய வெளியீடுகள்

திருவருட்பயன் (விளக்க உரையுடன்)	விலை	ரூ.	1-50
நீதிநெறிவிளக்கம் ,,	விலை	ரூ.	1-50
உண்மைநெறி விளக்கம் ,,	விலை	ரூ	0-75
கந்தர்கலி வெண்பா ,,	விலை	ரூ.	1-50
உண்மை விளக்கம் ,,	விலை	ரூ.	1-00
திருவுந்தியார் ,,	விலை	ரூ.	1-25
கொடிக்கவியும் வினுவெண்பாவும் ,,	விலை	ரூ.	0-75
திருக்களிற்றுப்படியார் ,,	விலை	ரூ.	1-50
இருபா இருபஃது ,,	விலை	ரூ.	1-25
போற்றிப் பஃறொடை ,,	விலை	ரூ.	1-25
நெஞ்சுவிடு தூது ,,	விலை	ரூ	1-50
திருக்குறள் ஒரு பொதுமறை	விலை	ரூ.	3-00
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-கருத்தரங்கக் கட்டுரைகள்	விலை	ரூ.	3-00
திருவாசகம்-ஆங்கில மொழிபெயர்ப்பு (கோ. வன்மீகநாதன்)	விலை	ரூ.	15-00
திருவருட்பயன்-நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன்		ரூ.	5-00
அபிராமி அந்தாதி தெளிவுரையுடன்	விலை	ரூ.	1-00
திருவிளையாடற்புராணம் (உரைநடை மதுரைக்காண்டம்)	விலை	ரூ	4-00
திருவிளையாடற்புராணம் (உரைநடை கூடற்காண்டம்)	விலை	ரூ	3-50
திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம்	விலை	ரூ	0-75
திருத்தொண்டர் புராணம் (மூலம்)	விலை	ரூ	12-00
திருத்தொண்டர்புராணம் (உரைநடை)	விலை	ரூ	12-00
Peeps in to the Cutural Heritage of Hinduism (M. ARUNACHALAM.)	விலை	ரூ,	25-00
கந்தபுராணம் மூலம் 2ம் பகுதி (பழையபதிப்பு)	விலை	ரூ	4-00
திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் (திருமுறைக் கலைஞர் க. வெள்ளைவாரணனர்)	விலை	ரூ	3 25
தொல் காப்பியம் நன்னூல்-எழுத்து			10-00

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு உண்டு.

ரூ: 1000/க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு அனுப்புகைச் செலவு இலவசம்.

முகவரி;- மேலாளர்:

ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612504

(தஞ்சைமாவட்டம்)

ஆலய பூஜைப் படிக்காசு நிதிக்கு

நன்கொடையளித்த அன்பர்கள் விபரம்

	6—6—83 முடிய கூடுதல்	ரூ.	15,316-50
1.	இராமேஸ்வரம் ஏஜண்ட் மூலம் வரவு	ரூ.	5-00
2.	திரு. அப்பு, துர்க்காகுடில், கும்பகோணம்	ரூ.	5-00
3.	திரு. தா. ம. வெள்ளைவாரணம், பளசை	ரூ.	20-00
	9—8—83 வரை கூடுதல்	ரூ.	15,346-50

Phone No: 222 Tel. Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

நடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்
சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்,
உரிமையாளர்கள் :
நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்
தென்னார்க்காடு மாவட்டம் — 608 001

உ

சிவ சிவ

தில்லையில் ஆடிச் சுவாதியில்
இன்னிசைத் திருமுறை விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

'கயிலைமாமுனிவர்'

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது

ருத்ரோத்காரி ஆண்டு ஆடித்திங்கள் 29-ஆம் நாள் (14—8-83) ஞாயிற்றுக்கிழமை ஆடிச் சுவாதியன்று நடைபெறும்.

திருமுறைவாணர்கள்:—

1. சுரலய இசைவள்ளல் திரு. எம். கனகசபை பிள்ளை
   ஸ்ரீ காசிமடம் சிவசிவ ஒலி மண்டப ஓதுவார், சிதம்பரம்.
2. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்
   திரு. டி. எம். விசுவலிங்கம், சபாபதி சகோதரர்கள்,
   திருவாவடுதுறை.
3. தேவார இசைமணி திரு எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர்
   ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.
4. திரு. ப். ராமச்சந்திரன், விருத்தாசலம்.
5. இன்னிசைமாமணி, சங்கீர்த்தனரத்ன, தேவார இசைமணி
   திரு. எஸ். திருஞானசம்பந்தம்
   தருமையாதீன கட்டளை ஓதுவார், சீர்காழி.
6. திரு. எஸ், தண்டபாணி தேசிகர்,
   தருமையாதீன கட்டளை ஓதுவார், சென்னை.
7. திரு. எஸ், எல்.சாமி, பிடில், திருச்சி.
8. திரு. எஸ். ஏ. கோபாலன் – வேய்ங்குழல், சென்னை.
9. திரு. கோ. வெங்கட்ராமன் – மிருதங்கம், திருப்பனந்தாள்

ஏஜண்டு,
ஸ்ரீகாசிமடம்
சிதம்பரம்

அருளாணையின் வண்ணம்,
ஆர். சுப்பிரமணிய பிள்ளை

குறிப்பு: சிதம்பரம் ஸ்ரீமந் நடராஜப் பெருமான் சந்நிதியில் இரவு 8-மணிக்குத் தொடங்கித் திருமுறைவாணர்கள் சிவமே நிலவிய திருவீதிகளில் இரவு முழுவதும் திருமுறை ஓதிக் காலை 6-மணிக்கு ஸ்ரீமந் நடராஜப் பெருமான் சந்நிதியில் நிறைவு செய்வார்கள்.

சங்கற்பநிராகரணம்

உரையும் விளக்கமும்

கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்.

பாடாணவாதி கருத்து

மூல மலத்தாற் சாலும் மாயை
கருமத்து அளவில் தரும்உரு இறைவன்
செறிந்துஇரு பயனும் நுகர்ந்திடும் உயிர்கள்
இருளுறு மலத்திற் பருவரற் படுதலின்
இடைஇரு நோக்கும் தடைபட் டோரில்
துயருறும் அதனுற் செயிருறு துன்பம்
கொத்தை மாந்தர் உய்த்துறுந் துயில்போல்
காட்சி என்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி எனவகுத் தனரே.

(இ - ள்) காலப்பழமைக்கு எட்டாத காலத்தேயே உயிர்க்கு ஆணவமலம் என்பது ஒன்று உண்டு. அதைப் போக்குவதற்கு மாயை பொருந்தும். உயிரின் வினைக்கு ஈடாக உடலைத் தருவன் இறைவன். அத்தகைய உடலைப் பொருந்திய உயிர்கள் தாம் செய்த அறம் பாவங்கட்கு ஏற்ற பயனை நுகரும். அவ்வாறு நுகர்ந்து வருங்கால் ஆணவ மலத்தால் உயிர் துன்புறும். காண்டற்குரிய கண்ணை இருட் படலம் இடை வந்து மறைத்தாற் போல அறிவுடையவுயிரை ஆணவம் இடைநின்று அறிவுமயக்கத்தைத் தரும். அத்தகைய குற்றத்தால் உயிர் மேன்மேலும் பிறப்பிறப்பிற்கு உட்படும் துன்பத்தை எய்தும்.

சிற்றறிவுடைய உயிர்கள் துன்பம் நீங்கித் துயிலில் அழுந்திக் கிடப்பது போல் உயிரும் வீட்டுநிலையில் சுட்டியறியும் அறிவு ஏது மின்றி இன்ப துன்பங்களும் இல்லையாய் இருக்கும் என்பதாம்.

மூலமலம் - ஆணவமலம், மாயையின் விளைவாய உடல் கருவி உலகு நுகர்வு ஆகியவற்றைப் பொருந்துதலையே மாயை பொருந்தும் என்றனர். உரு - உடல். உயிர்க்கு எஞ்ஞான்றும் அறியாமையைச் செய்தலின் இருள் உறு மலம் என்றார். பருவரல் - துன்பம். கொத்தை அறியாமை; அதாவது சிற்றறிவு.

பாடாணவாதி மறுப்பு

வகுத்துரை பெருகத் தொகுத்திடு முத்தி
நன்று நன்றுஇருள் ஒன்றிய மலத்தாம்
உளத்திற்கு உறுபொறி செறிபுலன் நுகர்தல்

விளக்கில் திகழும் மேன்மைய தன்றே
கருவிகள் அகல்வுழி மருவிய துயரமும்
நன்றென லாகும் துன்றிய படலத்து
இடைதடைப் பட்ட சுடர்விழி மாந்தர்
படலம் நீங்குதல் கடனு தலினே
காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி எனவகுத் துரைக்கில்
கரணு பாவம் மரணம் கருமர
மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவ ரன்றே
அனைய கதிக்கோர் முனைவரும் வேண்டா
தனிதரு துயரம் எனும்இது திடமே
பாடா ணத்திற் கூடா மூத்தி.

(இ - ள்) காட்டுக்கள் பல கூறி நீ வகுத்துரைத் திருக்கும் வீடுபேற்றுநிலை உயிர் ஆணவத்தோடு பிணிப்புற்று அழுந்தி நிற்கும் கேவல நிலையை ஒத்ததாம். இவ்வாறு கூறியது மிகவும் நன்று.

கட்டுநிலையில் உயிரிடத்துக் கூட்டப்பட்ட பொறிவழிப் புலன் களைத் துய்த்துவருவது கண்ணொளி விளக்கொளியைக் கொண்டு உணரும் மேன்மையதாம். கருவிகள் நீங்கியவழி உயிர் மீளவும் ஆணவமலத்தில் அழுந்திக்கிடக்கும் தன்நிலையும் (கேவலநிலை) முன், நீ கூறிய கட்டுநிலையைப் போல் நன்று எனவாகும். ஏனெனில் மிகவும் மறைக்கப்பட்டதிரையால் இடையில் கண் ணொளி நீங்கிய உயிர்க்குப் பின் அத்திரை நீக்கப்பட்டது போல் வதாய் இருத்தலின் ஆம்.

சுட்டிஒன்றை உணரும் காட்சி இல்லாநிலையும் இன்பதுன்பங் களில்லா நிலையும் வீடுபேறு எனில் கருவிகளினின்றும் பிரிந்து நிற்கும் உயிரினங்களில் இறப்பினைப் பெற்றோரும், கருவடைந் தோரும், மரம் முதலிய தாவர இனங்களாக நிற்போரும் வீடு பேறடைந்தவராதல் வேண்டும். அத்தகைய வீட்டுநிலை பெறுதற்கு ஒராசிரியனும் வேண்டுவதின்றாம். கருவிகளனைத்தும் நீங்கி ஆணவத் தோடு கட்டுண்டு தனித்து நிற்கும் நிலையில் அறிவு விளக்க மில்லாத துன்பம் உளதாம். அதுபோலவே நீகூறும் கல்லெனக்

கிடக்கும் வீட்டுநிலையிலும் ஒன்றையும் அறியாத துன்பம் உளது என்பதாம்.

கருவிகளின்றி இன்ப துன்ப இயல்பின்றிக் கல் எனக் கிடத்தலே வீடுபேறு என்பது இவர்கள் கருத்து. இந்நிலை கேவலநிலையை ஒத்த தாதலானும், கேவலநிலையில் அறியாமையாகிய துன்பில் கிடப்பது போல, வீட்டுநிலையிலும் அத்தகைய துன்பில் கிடக்கும் துயரமே இருத்தலானும் அது வீடுபேருகாது என மறுக்கப்படுகிறது. நன்று நன்று என்பது இகழ்ச்சிக் குறிப்பு. கரண + அபாவம் = கரணுபாவம் கருவிகளினின்றும் நீங்குதல். முனைவர்— குருமூர்த்தி. பாடாணம்— கல்.

பேதவாதி கருத்து

ஈசனது அருளால் பாசத் தொகுதி
செறிவுறு செம்பிற் கறையுறு களிம்பு
குளிகை தாக்க ஒளிபெற் றுங்கு
நித்த சுத்த முத்த ராக
வைத்தனர் உலகில் மறைவல் லோரே.

(இ – ள்) குகைக்குள் செறிந்த செம்பினிடத்து உண்டான கரிய களிம்பு, இரதகுளிகை பொருந்தக்கெட்டுப் பொன்னுயது போலப் பக்குவப்பட்ட உயிர்களுக்கு இறைவனின் கருணையால் மும்மலமும் கெட்டு, அழிவற்றதாயும் வினைமாசு கழிந்ததாயும் இருக்கும் வீட்டுநிலை கிட்டும். உயிர் பெறுவானும், வீடு பேறுமாய் அமையும் என உலகில் மறைநூல் வல்லோர் கூறுவர் என்பதாம்.

பாசத் தொகுதி-மும்மலக்கட்டு, குளிகை – இரத குளிகை. இது செம்பைப் பொன்னுக்க வல்லது என்பர். நித்தம் - அழியாதது. சுத்தம் - வினைமாசு கழிந்தது. முத்தர் - பிறவிப்பிணியினின்றும் நீங்கினவர்.

பேதவாதி மறுப்பு

மறைகள் ஆகமத் துறைகள்மற் றெவையும்
நாசமில் பதிபசு பாசமென்று உரைத்தல்
அயர்த்துஒர் குளிகைச் சயத்தால் தாம்பிரக்

காளித நாசம் பாசத்து ஏய்த்தல்
கூடா தன்றியும் குளிகை சீருணம்
நீடா தழித்த நிலைநிலை ஆதலின்
பேத வாதம் ஓதுதல் பிழையே
இன்னும் இன்னுயிர் ஏமங் குளிகை
தன்னில் அன்னியம் தருவது திடமே
வீடுஇத் திறனிற் கூடக் கூடா;

(இ-ள்) நான்மறைகளும் ஆகமங்களும் அவற்றின் வழி வந்த நூல்கள் பலவும் இறை உயிர் தளை ஆகிய மூன்றற்கும் அழிவில்லை என நுவலுவதை மறந்து, ஓர் இரத குளிகையின் ஆற்றலால், செம்பில் உண்டாய களிம்பு கெடுதல் போலத் தளையும் கெடும் என்றல் அப்பனுவலின் கருத்துக்கு மாறுபாடாகும். அன்றியும் இதர குளிகை செம்பை அழித்துப் பொன்னாக்கியது போல்வது தளைநீக்கம் எனில், உயிரும் தன் தன்மை கெட்டுப் புதியதொரு தன்மையைப் பெறுதல் வேண்டும். அவ்வாறுயின் வீட்டுநிலையில் உயிர் கெடாது, பெறுவானும் பேறுமாய் நிற்கும் என நீ முன்கூறிய பேத வாதம் பழுதாய். அன்றியும் செம்பு தன்னைத் தூயதாக்கிய குளிகையும் ஆகாமல் தன்தன்மையும் கெட்டு இடையே பொன்னுதல் போல, உயிரும் தன்னை வினையின் நீக்கிய முதல்வனும் ஆகாமல் தன் தன்மையும் கெட்டு வேறொரு நிலையைப் பெறுதல் வேண்டும். அவ்வாறில்லை என்பது கண்கூடு. ஆதலின் செம்பில் களிம்பை நீக்கியது போல்வது வீடுபேறு என்றல் அடாது என்பதாம்.

அயர்த்து - மறந்து. சயத்தால் - ஆற்றலால் சீருணம் - நிலை நிற்க. பேதவாதம் - (வீட்டுநிலையில்) உயிரும் வீடுபேறும் வேறு யிருப்பது. ஏமம் குளிகை - தூயதாக்கிய குளிகை.

சிவசமவாதி கருத்து

பாசமும் பசுவும் ஈசனும் என்றுஇம்
மூவகை உணர்வும் தாம்முதன் மையவாய்ப்
பாச ஐம்புலன் தேசுற உணர்த்தப்
பசுத்தனி ஞானம் புசித்திடும் அன்றே
இனைய ஞானம் பிரிவுற எரியாச்

செந்தழல் தகுநெறி அந்தம்இல் உயிரும்
அறிவாய் ஒன்றும் அறியா தன்றே
இவ்வாறொழுகும் ஏனை உயிர்க்கு
முன்னேன் தனது முதிர்ஒளி ஞானம்
அறியாப் பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த
வண்டென உயிரைக் கொண்டிடும் உயிர் அது
தன்னை நோக்கித் தான் அதுவாகி
ஐவகைத் தொழிலும் மெய்வகை உணர்வும்
பிரியா வாறு பெற்றுத்
திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந் திடுமே.

(இ - ள்) இறை உயிர் தளை என்ற மூன்றற்கும் அவ்வவ் வுணர்வுகள் (பதிஞானம் பசுஞானம் பாச ஞானம்) தொன்மையாகவே உள்ளன. பாசஞானம் என்பது உயிர் பொறிவழிப் புலன்களைக் குற்றமற அறிவதாம்; பசுஞானம் என்பது அவ்வாறறிந்த புலன்களைத் துய்ப்பதாம்; இவ்விருஞானங்களும் நீக்கிய விடத்துக் கொழுந்து விட்டு எரியாமல் கிடக்கும் செந்தீயைப் போல உயிரது அறிவு இருக்கும் பொழுது அது எதனையும் சுட்டியறியாது.

இவ்வாறு நாள்தொறும் தன்னிலையிலும் (கேவலத்திலும்), கட்டுநிலையிலும் (சகலத்திலும்) இருந்துவரும் உயிர்க்கு இறைவன் தன்னுடைய ஞானத்தை வழங்கி, ஒன்றும் அறியாது கிடக்கும் பச்சை நிறம் வாய்ந்த சிறிய புழுவை வந்து எடுத்துக் கொண்ட குளவி போல ஒன்றும் அறியாத உயிரை வந்து எடுத்துக் கொள்ளுவன். புழு குளவியை நினைந்திருந்து அதன்வடிவேயானாற் போல உயிரும் அச்சிவபரம் பொருளையே நினைந்து சிவவடிவாகி இறைவனின் ஐந்தொழில்களையும் முற்றுணர்வையும் பெற்று அப் பொருளின் நீங்காதிருக்கும் என்பதாம்;

ஏகாரம் இரண்டும் அசைநிலை.

சிவசமவாதி மறுப்பு

சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமும்
ஒருகா லன்றித் தெரிவுற நிற்கில்

ஒண்பொருள் காணும் பண்பினுக் கொருகால்
பருதியும் மதியும் எரிதரு விளக்கும்
வேண்டல் இன்றே காண்தகு காலை
ஒன்றுஒன் றாக நின்றறி வுறுமெனில்
அன்னியம் அறியா மன்உயிர் பொறிபுலன்
தானே அறியா தலைவற் குலகினை
ஆனா அறிவால் அறியவேண் டின்றே
கொழுந்தழல் தருமெனில் அழுந்திடும் அவத்தையில்
திரியாத் தலைவன் தெரியாத் தன்மைவந்து
எய்தல் ஆகா மெய்யுறு பொருட்கு
முன்னர்க் கீடம் தன்னென எடுத்த
வேட்டுவன் இயல்பு கூட்டல் பெறாதே
வண்டிறும் பெடாஉட் கொண்டது தனக்கு
மந்திர வாதம் தந்ததும் இலதே
எடுத்திடும் அதனால் அடுத்ததென் றறையில்
கருமயிர்க் குட்டி இருசிறைப் பறவை
ஆயின தெடுத்த தாயர்சாற் றிலரே
பிறவிப் பேதத் துறையிவை கிடக்க
ஏயும் இத்திறன் ஆயுங் காலை
யோகத் தகுதி யாகத் தகுமே
ஞான மின்மையென் றோதுவ தெவன்எனில்
உயிரும் உணர்வும் பயிலுத லின்றி
வேட்டுவன் உருவம் மென்புழு உணர்வு
கூட்டுத லால்உருக் கூடுத லானும்
முத்தியில் இறையிற் பற்றுத லின்றித்
தன்உரு அணைந்த பின்அதன் உணர்வு
மாறுத லானும் ஊறுடைத் தன்றே
ஈசன தியல்பருள் எய்துயிர் இயற்றல்
பேசுதல் தவறெனப் பெருமறை அறைய
ஐந்தொழில் உயிரும் தந்திடல் தகுமே
ஆவதென் முன்நாள் நாவலர் பெருமான்
பண்டொரு முதலை உண்ட மைந்தனை

வரவழைத் தனர்என் றுய்பிழைப் பிலததூஉம்
தந்திட வேண்டும் என்றன ரன்றே
இன்னவை கிடக்க முன்னவன் தன்மை
எய்தினர் எல்லாச் செய்தியும் செய்வர்
இரும்பெரி எய்தித் தருஞ்செயல் தகவெனில்
பொருள்நிலைக் கிடக்க ஒருதிட் டாந்தப்
பேறே ஆயிற் சிறுக் கதுவிய
புனல்ஒரு புடைசேர் கனல்தகு மாயினும்
வேறொரு பொருளை நீறுக் கிலதே
நெருப்பெனும் இதனின் உருத்தனி காட்டுக
அங்கியும் ஒன்றில் தங்கிநின் றல்லது
தன்தொழில் நடத்தா தென்றறி இனிநீ
இரும்பனற் செய்தி தரும்பரி சுளதோ
அதுவென்னோர் அலகை பொதிதருங் காலை
அதன்செயல் அனைத்தும் இவன்செயல் ஆமால்
அவன்இவன் ஆகில் இவன்அவன் செய்திக்
கென்அவை என்னிற் பின்னுறு செயலும்
அதன்செய லன்றி இவன்செய லாகில்
இவன்செயல் பேயின் தன்செயல் ஆகி
இருந்த வாஎனத் தெரிந்திட வேண்டும்
தெரியா தாகிற் புரியிற் கடுங்கனல்
எரிந்த தென்னும் இதுதகும் அன்றியும்
அவன்இவன் ஆகில் இவன்அவன் செய்தி
என்று செய்வான் ஒன்றிய மதத்தாய்
எல்லாம் அறிதல் செல்லா துயிர்கள்
சிற்றறி வெனும்இச் சொல்தவ றுகும்
என்பதென் அலகை தன்பத மடைந்தோர்
கொண்ட வாறு கண்டனம் என்னின்
மூங்கை அந்தர்உற் றேங்கிய குணங்குறி
செய்வதென் இன்னும் பவ்வமுற் றழுந்தினும்
நாழி கொள்ளா தாழியின் அலைபுனல்
அதனுற் கருத்து முதலுள தாக

வேண்டும் அன்றே ஈண்டினி அமையும்
எல்லாம் எனும்இச் சொல்லாற் படும்பொருள்
அனைத்தும் தாக்காத் தனிப்பரத் துற்றவர்க்கு
எவ்வகை உணர்வு செய்வதென் செப்புக
ஒன்றின் ஒன்றும் ஒன்று துலகில்
நின்ற போதுயிர் நேராம் அன்றே
முத்தி உற்ற நற்றவர் அவையிடைச்
சேர்வர் என்றனை சார்தருமுத்தி
சாலோக் கியமோ சாயுச் சியமெனில்
பந்த முற்ற கந்தல் கழித்த
அறிவினோ டறிவு பிறியாப் பெற்றி
வேண்டும் என்றதற்கு ஈண்டிவர் இவ்வாறு
இருப்பர் என்பதற் குருத்தான் வேண்டும்
அண்ணல தருளின் நண்ணி இருப்பினும்
சீவன் முத்தரென் றோதினர் அகன்று
நீங்கியும் உருவம் நீங்கா தாயின்
ஓங்கிய முத்தி யாவதென் உரைக்க
செடியுடல் அணுகாக் குடிலை கொடுக்குமென்று
ஓதினை நீயே பேதாய் பகட்டுரல்
ஒளிர்சினை முச்சித் தளிர்எனும் இதுதகும்
இச்சா ரூபம் நச்சினர் என்னின்
மும்மலத் தேதும் இன்மைய தன்றே
இதுவளர் முத்திப் பதமென இயம்புவர்
ஈங்கிவை நிற்க.

(இ-ள்) இவ்வாறு கூறப்பெறும் பதிஞானம் பசுஞானம் பாச ஞானம் ஆகிய மூன்றையும் கூடியே உயிர் ஒன்றை அறிய வேண்டுமாயின் கண் ஒருபொருளைக் காண வேண்டுமிடத்தும் கதிரவனும் மதியமும் விளக்கும் ஆகிய மூன்றும் வேண்டத்தக்கனவாம். ஆனல் இம்மூன்றில் ஒன்றன் துணைகொண்டே குருவிற்கு அத்தகைய உரை ஒன்றும் நிகழ்த்தாத குளவியை உவமை கூறலும் பொருந்துவ தன்றாம்.

திருவிளையாடற் புராணம்

உரை நடை

வந்தி தன் கரை அடைக்கும் ஆள் இன்றி வருந்துதல்

இத்தகைய வந்தி என்பவள் தனக்கு அளந்துவிடப்பட்ட பங்கினை அடைப்பதற்குக் கூலியாள் கிடைக்காமல் மிகவும் வருந்தி "ஐயோ! என்னே! அரசன் தண்டித்தானாயின் யான் யாது செய்வேன்?" என்று மனந்தடுமாறி மதுரை நாயகனை நினைத்து, "ஐயனே! பிட்டு விற்றுண்டு வாழ்கின்ற பேதையேனாகிய யான் இதுவரையும் நின் திருவருளால் துன்பம் என்பது எள்ளளவேனும் இன்றிச் [1]சூரியன் எங்கேனும் எழக்கடவன் என்று கருதி இருந்தேன்; இன்று பாண்டியன் ஆணையாலே இடையூறு ஒன்று வந்துவிட்டது; எந்தையே! எனக்கோ நாயகனுமில்லை; மக்களுமில்லை; சுற்றமுமில்லை; துணையாவார் ஒருவருமில்லை; ஆதலால் பற்றுக்கோடின்றித் துன்பக் கடலுள் ஆழ்ந்து வாடும் பாவியாகிய எனக்கு இன்று இணையற்ற இந்தத் துன்பம் வருதல் அறமோ? தேவர்கட்கும் அரிய தேவனே! அன்பர்க்கு எளிய அண்ணலே! அரசன் ஆணைப்படி அமைச்சர்களின் சினம் என்பால் விரைந்து வருமுன் கூலியாளாக வந்து எனது ஏவலைச் செய்பவரைக் கண்டிலேன்; ஏழையேன் இனி என் செய்வேன்! கூலியாள் வருவதுண்டோ?" என்று மழைபோலக் கண்ணீர் சொரிய அழுது நின்றாள்.

இறைவன் கூலியாளாக வருதல்

அப்பொழுது சோமசுந்தரக் கடவுள், வந்தியென்பாள் முன்பு மனத்தால் நினைத்து யாவரும் அறியாமல் உண்பிக்கும் பிட்டினை உலகிலுள்ளவர் காண உண்டு அவள் துன்பத்தை நீக்கவேண்டி மீனாட்சியம்மையாரின் பாகத்தை மறைத்து அருள்வடிவங் கொள்ளலானார். பின்பு, குண்டோதரனுக்கு நீரினை ஊட்டி வையை நதியாகச் செல்லும் கங்கையின் பிரிவைப் பொறுதவராய் அவளை அன்புடன் காணுதற்கு அங்கையற்கண் அம்மையாரை வஞ்சித்துத் திருவுருவத்தை மாற்றிப் புறப்படுவாரைப்போல ஞான மூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுள் வெளியே வந்தார்.

---

1. இஃது ஏனை உயிர்ச் சார்பும் பொருள் சார்பும் இன்மையால் கவலையற்றவள் என்பதைக் காட்டும். இங்கே, "எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்" எனவரும்: திருவாசகம் – திருவெம்பாவை அடி கருதற்பாலது.

அவர், அழுக்கேறிய பழைய துணியொன்றை இடையிற் கட்டி, மெய்த்தொண்டர் கட்டிச் சாத்திய இண்டை மாலையைப்போன்ற சும்மாட்டின்மேல் கூடையினைக் கவிழ்த்து, அழகிய திருத்தோளின் மேல் திண்ணிய மண்வெட்டியை வைத்துக்கொண்டு, முனிவர்கள் அன்புடன் வேள்வியின்கண் அளிக்கின்ற அவியையும் இடப்பாகத்தின் கண் உறையும் உமாதேவியார் ஊட்டும் அமுதையும் இனிது உண்டும் அடங்காத பசியினையுடையார்போலவும், தாயின் முலைப்பாலைப் பருகுதற்குப் பேரவாவுடன் வரும் மகவுபோலவும், வேத முடியின் மேலுள்ள திருவடி நிலந்தோயுமாறு, "கூலிகொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ?" என, வேதமொழிபோலக் கூறிக் கொண்டே கண்ணீர் வடித்துத் துன்புறுத்தும் வந்தியினது வீதியிலே வந்தருளினார்.

வந்தி இறைவனாகிய கூலியாளைக் கண்டு மகிழ்ந்து பேசுதல்

தந்தை தாயும் பிறரும் இன்றி வருகின்ற தனிக்கூலி மைந்தர் கூறும் குரலைக்கேட்டு, வந்தியானவள் தனது மனக்கவலையை யொழிந்து, மக்கட்பேறு இன்மை என்னும் வறுமையாளர் மக்கட் பேறுகிய செல்வத்தைப் பெற்ற காலத்து அவர்க்கு உண்டாகும் மகிழ்ச்சிபோல் மகிழ்வுற்று வெளியே வந்தாள்; அப்போது, தாய் போலத் தன்பால் அருள் சுரந்து வரும் அக்கூலியாளரை அழைத்து, "எனக்கு அளந்துவிடப் பட்ட கரையை அடைத்துத்தருவாயோ? என்று வினவினாள். அதற்குக் கூலியாளராகிய இறைவர், "தாயே! அடைத்துத் தருகின்றேன்; பின்பு எனக்குக் கொடுக்கும் கூலி யாது?' என்றார்: பெருமூதியவளாகிய வந்தி, "நான் விற்கும் பிட்டையே உனக்குக் கூலியாகத் தருவேன்" என்றாள். சோமசுந்தரக் கடவுளாகிய கூலியாளர் அதற்கு உடன்பட்டு, மூதியாளை நோக்கி, "அன்னையே! பெரும்பசியால் இப்போது நான் வருந்துகின்றேன்; முன்னர் உதிர்ந்த பிட்டையெல்லாம் தருவாயாக; அதனைத் தின்று நான் சிறிது இளைப் பாறிக் கொண்டு நினது பங்குக் கரையைக் கட்டுவேன்" என்று கூறினார்.

இறைவன் வந்தியளித்த உதிர்ந்த பிட்டினை உண்டல்

வந்தியார், தெள்ளிய மாவினால் அவித்த பிட்டினை அழுக் கடைந்த - மூடிய ஆடையை நீக்கி அள்ளியெடுத்து, "அப்பா! இதனை உண்பாயாக" என்று கூறி அளித்தனள், இடையில் கட்டிய புலித் தோலாடையை நீக்கிவந்தவர், தம் முன்றானையை விரித்து அதனை ஏந்தி, "இது மிக நன்றாயிருக்கிறது" என்று அவள்

அன்பையும் உடன் கூட்டி அருந்தினர்; "தாயினுடைய முலைப்பாலினும் இப்பிட்டு மிக்க சுவையுடைத்து; இது சுந்தர பாண்டியனாய் இருந்து இவ்வுலகை ஆண்டருளிய சோமசுந்தரக் கடவுளுக்கே உரியதாகும்" என்று சொல்லிச் சொல்லி வாயிற் போட்டுத் தலையை அசைத்து உண்டார்; [1]"தந்தை தாயில்லாமல் தனித்த கூலியாளாக வந்து எனக்கு ஒப்பற்ற அன்னையாக அருள் சுரந்து நீங்காத இளைப்பை நீக்கினையே! ஆதலால் இனி வேலைத் தலத்திலே சென்று உன் மன மகிழும்படி வேலை செய்வேன்!" என்று சொல்லிக் கொண்டு போனர்

இறைவன் வந்தியின் கூலியாளராய் மண் சுமத்தல்

சோமசுந்தரக் கடவுளாகிய கூலியாளர்[2] வையை யாற்றங்கரையினை அடைந்து[3] 'யான் வந்தியின் கூலியாள்' என்று தம்மைக் கணக்கில் எழுதுவித்துக் கொண்டு கரையினை அடைக்கத் தொடங்கினர்; மண்ணினை வெட்டுவார்; அதனை த்டுடு தூக்கி முடிமேல் வைப்பர்[4]; அதிகப் பாரம் என்று கீழே கொட்வார்; அதனைக் குறைத்து எடுத்துக்கொண்டு போவார்; சும்மாடு விழுமபா தட்டுவார்; சுமையைக் கீழே இறக்கி வைத்து அச்சும்மாட்டினை எடுத்துத் தலையில் படியுமாறு கட்டுவார்: பிறகு விரைந்து சுமந்து கொண்டு போய்க் கரையிற் கொட்டுவார்; இவ்வாறு ஒரு முறை இரு முறை மணணைச் சுமந்து களைத்தார்; கைம்மலர் கன்றவும், ஒளி பொருந்திய முடிமேல் வடு அழுந்தவும், மலரடிகள் குருதி சுரந்து செந்நிறங் காட்டவும் ஒரு செழித்த மரநிழலை அடைந்தார்.

---

1. இங்கே, "தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி" என்னும் திருவாசகம் திருச்சாழல் அடி கருதற்பாலது.

2. இந்த இடத்துக்குத் தற்போது 'பிட்டுத்தோப்பு' எனப் பெயர் வழங்குகிறது. இது மதுரைக்கு வடமேற்கில் வையையின் தென்கரையில் உள்ளதாகும். இதுதான் சோமசுந்தரக் கடவுள் பிட்டுக்கு மண்சுமந்த இடம் என்பர்.

3. இங்கே, "மணியார் வையைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும்" என வரும் திருநாவுக்கரசர் தேவார அடி சிந்திக்கற்பாலது.

4. இங்கே, "ஆங்கது தன்னில் அடியவட்காகப், பாங்காய் மண் சுமந்தருளிய பரிசும்" (திருவாசகம் - கீர்த்தித் திருவகவல்) எனவும், "பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே" (திருவாசகம் - திருக்கழுக்குன்றப் பதிகம்) எனவும் வரும் அடிகள் உன்னற்பாலன.

மலைமகளும் சல மகளும் அறியாமல் தம் திருமேனி முழுதும் நில மகள் தீண்டித் திளைக்கப் பிறை முடியை கூடையாகிய அணையின்மேல் வைத்து மேருமலை அனைய இறைவர் தம் வடிவினை உணர்ந்து துயில் கொண்டார்; அந்த மரமே வடவாலமரமாகவும் நீர்ப்பெருக்கை அடைப்பவர்களே சனகாதி முனிவர்களாகிக் கண்குளிரவும் மெய்யுணர்வால் பெறப்படும் மோனமயமாகிய தம் தூய அருளுருவினைத் தெளிவிப்பாரைப்போலத் தூங்கும் தூக்கத்தினின்றும் விழித்தார்; எழுந்து கூத்தாடினார்; சாம வேதம் போல இனிய இசையினைப் பாடினார்; சிரித்தார்; தொழில் புரிவோர் பராக்குப் பார்க்கக் கரையின்கண் மணலைக் குவித்துத் தாண்டினார்; காலிலுள்ள துகள் மேலே எழுமாறு பாய்ந்து ஓடினார்; உடனே திரும்பினார்; உன்மத்தரைப் போலப் பேசாமல் இருந்தார்: பிறகு, வேலையினாலே மிகவும் வருந்திக் களைத்தவர் போல உடலிலே வேர்வை வடியப் பெருமூச்சு விட்டார், வாயூதிக் காற்றினை அழைத்து மிகப் பசித்தவர் போலத் தளர்வுற்றுத் தம் அடியாளாகிய வந்தி இடும் பிட்டின்மேல் விருப்புடையவராய் மீளவும் அவளிடஞ் சென்றார்; துன்ப வெள்ளத்தினை நீந்திக் கடந்து இன்ப வெள்ளத்தில் அழுந்திய வந்தியின் முன் சென்று, ''அன்னையே! அளந்து விட்ட கோலுக்கு ஏற்கக் கரைகளெல்லாம் அடைபடுகின்றன! யான் இன்னும் மிக்க பசியுடையேன்; ஆதலின், விரைவில் பிட்டு இடுவாயாக'' என்றார்.

அப்போது வந்தியார் வெந்த பிட்டினை அளித்தாள். இறைவர் அதனை வாங்கிக் கையும் நாவும் சுடச் சுட வாயிலிட்டு இரு பக்கங்களிலுமுள்ள கவுளினைக் கையால் ஒற்றிப் பதம் பொருந்த அதனை அருந்திக்கொண்டே அவ்விடத்தினின்றும் நீங்கிச்சென்று முன்போலக் கரையினை அடைக்க முனைந்தார்.

பிட்டினை வாய்நிறையப் போட்டுத் தின்பார்; மிக வலிமையுடையார்போல மண் வெட்டுவார்; வெட்டியெடுத்த மண்ணைத் தூக்கிக்கொண்டுபோய் வேறு பங்கில் கொட்டுவார்; உடைப்பு அடைபடுவதைக் கண்டு தோளினைத் தட்டுவார்; களிப்புடன் அருகில் நின்றவரைக் கட்டித் தழுவுவார்; எடுத்த மண்ணுடனும் கூடையுடனும் இடறி விழுபவர்போல ஆற்றிலே வீழ்வார்; விரைந்து நீந்திச்சென்று கூடையைத் தள்ளி வந்து எடுத்துக் கரையேறுவார்; அக்கூடையைப் பலமுறை தட்டித்தட்டி ஈரத்தைப் போக்கிச்

சும்மாட்டின் கட்டினை அவிழ்த்துத் திரும்பவும் கட்டுவார்; மண்ணைத் தோண்டுவார்; ஒரு கொட்டுமண்ணைச் சுமந்துகொண்டு போவார்; கூடையை உடைப்பில் வீழுமாறு தட்டுவார்; அதனை எடுப்பவர்போலத் தாவி நீரிலே வீழ்ந்து அது வெள்ளத்தில் ஓடுமாறு விட்டு ஒரு மரத்தினைப் பிடித்து மிதப்பார்; கரையிலேறப் பல பக்கங்களினுஞ் சென்று தவிப்பார்; நீர்ச்சுழியுள் அழுந்துவார்; நெடுந்தூரம் சென்று மேலே எழுந்து தோன்றுவார்; திரும்புவார்; மண்வெட்டி கழலும்படி பெய்வார்; காம்பில் ஆப்பினைச் செருகிக் கோத்துத் தட்டுவார்; பெருமூச்சுவிட்டுத் தள்ளாடி நின்று வருந்துவார்; முடிச்சிலுள்ள பிட்டினை அள்ளி அருந்துவார்; வேலை கெடும்படி பிறர்க்கும் அள்ளிக் கொடுப்பார்; வேலை வாங்குவோர் பிரம்பினை ஓங்க, அதனைக் கண்டு கைதட்டிச் சிரிப்பார்.

இவ்வாறு எல்லாத் தொடர்பையும் விட்டுத் தற்போதமின்றி அண்மைநிலையினை உணர்ந்த யோகிகள் ஞானக்கண்ணால் அன்றி அறியமுடியாத பரஞ்சுடராகிய சோமசுந்தரக்கடவுள் புவியிலுள்ளார் ஊனக்கண்ணாலும் கண்டுகளிக்க அவர்களுடன் தாமும் ஒருவராய் விளையாடினார். உலகமனைத்தையும் பேரருளினாலே படைத்தும் காத்தும் அழித்தும் பெருவிளையாடல் புரியும் பிறைமுடிப் பெருமானார் இங்கே இவ்வண்ணம் விளையாடிக்கொண்டிருக்கப் பிரம் பேந்திய கையுடன் அருகு நின்று வேலை வாங்குவோர் அடைபட்ட கரைகளைப் பார்க்கச் சென்றனர்.

கோலாளர் வந்தியின் கூலியாளைக் கண்டு மயங்கிக் கூறல்

அப்பொழுது அடைபட்ட கரைகளையெல்லாம் கணக்குப்படி சரிபார்த்துக்கொண்டு குறுக்கே வந்த ஏவலாளர்கள், வந்தியாருக்கு அளந்துவிட்ட பங்கு மாத்திரம் அடைபடாதிருத்தலைக் கண்டு வெகுண்டு, "வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் யார்?" என்று வினவி ஓடி, மன்மதனைப்போல் எதிரில் நின்ற இறைவனுகிய கூலியாளரைக் கண்டு, "ஏடா! தம்பீ! மற்றைப் பங்குகளெல்லாம் அடைபட்டன; நீ இன்னமும் இந்தப் பங்கினை மட்டும் அடைக்காமல் சும்மா இருக்கின்றனையே! அதற்கு யாது காரணம்?" என்று வினவினர். அதற்கு அண்ணலார் வேறொன்றும் பேசாமல் தம்மை யறிந்தவர்போலச் சிரிப்புடன் இறுமாப்புத் தோன்ற இருந்தார்.

மேலும் ஆற்றுவெள்ளம் மேலிட்டு வந்து அடுத்த பங்கில் அடைபட்டிருக்கும் கரையை இடித்துச்சென்றது. அப்போது கோலா

ளர்கள் வந்தியினுடைய கூலியாளரின் கட்டழகைக் கண்டு கோலினுல் அடிக்க அஞ்சி மயங்கி நின்றனர்; ''இவன் என்ன பித்துடையவனே? பேய் கோட்பட்டவனே? வந்தியை வருத்துதற்கு வந்த எத்தனே? இந்திரசாலம் வல்ல சித்தனே? இசைப்பாடலில் வல்ல கந்தருவனே? பண்ணெடு தாளத்திற்கு ஏற்ப ஆடும் பரத நூற்புலவனே? பெற லருஞ் செல்வத்திலிருந்து பின் செல்வங் குன்றி வருந்திய மகனே? புகழ்பெற வாழ்ந்து கெட்டவருள் இவன் யார் மகனே? காமனும் விரும்பும் கட்டழகுடைய இவன் கூலியின் பொருட்டு ஆளாக வந்து வேலை செய்தது யாது காரணமோ? தாயும் தந்தையும் அற்ற தனியனே? இவன் இதற்கு முன் வேலை செய்தவன் அல்லன்; அதனை இவன் திருமேனியே சொல்லுகின்றது. வேலை தொடங்குதற்கு முன்னரே கூலியும் வாங்கிக்கொண்டான்; தானே இங்கு வந்து, 'யான் வந்தியின் ஆள்'' என்று கணக்கிலும் பதிவு செய்யுமாறு கூறினன்; வேலையும் செய்யாமலிருக்கிருன்; இன்சொல் கூறினும் கேளான்; கல்லில் அடித்த முளையே போலச் சிறிதும் அசையாது நம்மையும் ஒருபொருட் படுத்தாமல் நிற்கிருன். இச்செய்தியை நாம் அரசனுக்கு விண்ணப்பஞ் செய்வோம்'' என்று கருதிச் சென்றனர்.

கோலாளர் பாண்டியனிடம் வந்தியின் ஆளைப்பற்றிக் கூறல்

கோலாளர் பாண்டியன் திருமுன்னே சென்று வணங்கி நின்று, ''அரசே! நகர மக்கள் தங்களுக்கு அளந்துவிடப்பட்ட பங்குகளையெல்லாம் ஒழுங்காகக் கரைபோட்டு மலையைக் காட்டிலும் உறுதியாகக் கட்டிவிட்டனர். ஆனல், பிட்டுவிற்கும் வந்தி என்கின்ற முதியவள்மட்டும் தன் பங்கினை இன்னமும் அடைத்தாளில்லை. மன்மதனிலும் மிக்க கட்டழகுடைய ஒருவன். ''வந்தியின் ஆள்'' என்று அங்கே வந்து கணக்கில் பதிவுசெய்துகொண்டு அரசிளங் குமரனைப் போலக் களித்தும ஆடியும் பாடியும் வேலை செய்யாமல் காலத்தை வீணே போக்குகின்ருன்; வேலையைப்பற்றி மனத்தில் சிறிதும் கருதினனில்லை. அவனுடைய பேரழகினைக் கண்டு அஞ்சி அடிக்கவும் மனங்கொள்ளாமல் இங்கு வந்தோம்'' என்று கூறினர்.

பாண்டியன் சென்று கரைகளைப்பார்வையிடல்

உடனே பாண்டியன் விரைந்து அமைச்சர்களுடன் எழுந்து, ''நாம் சென்று அடைக்கப்பட்ட கரைகளையெல்லாம் பார்ப்போம்''

---

1. இங்கே, ''பாண்டியனுடையமாறு கோலாளர் இறைவனுகிய கூலியாளை அடித்தனர்'' என்று நம்பி திருவிளையாடல் கூறுகிறது.

என்று கூறி வையையின் கரையினை அடைந்து, உயர்த்தி அடைக்கப்பட்ட கரைகளனைத்தையும் கண்டு மகிழ்ந்தான்; பின்பு வந்தியின் பங்கு அடைப்பவரின்றி அடுத்த வலிமையுள்ள கரையையும் இடித்து வெள்ளம் பெருகிச் செல்வதைக் கண்டு கோபித்து, ''இக் கரையினை அடைப்பவன் எங்குற்றான்?'' என்று வினவினான். அரசனுடைய கோபத்தைக் கண்ட மாறுகோலாளர் பயந்து சினங்கொண்டவர்களாகி, ஓடி உள்ளும் புறமும் மேலும் கீழும் உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வராகிய (பரம்பொருளாகிய) கூலியாளரின் கையை தொட்டுப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து, ''இவன்தான் வந்தியின் ஆள்'' என்று காட்டி நின்றனர்.

வழுதி இறைவனுகிய கூலியாளரைப் பிரம்பால் அடித்தல்

அரிமருத்தன பாண்டியன் அவரைக் கண்டு சினந்து பொற்பிரம்பைக் கையிலே வாங்கி அண்டங்களையும் அளவிறந்த உயிர்களையும் தனது திருமேனியாகக் கொண்ட இறைவனது முதுகிலே வீசி அடித்தான்[1]. எங்கும் நிறைந்த பேரொளியாகிய சோமசுந்தரக் கடவுள் கூடையோடு மண்ணை கொட்டிவிட்டு உடனே மறைந்தருளினார்.

எவ்வுயிர்கட்கும் அறிவுக்கு அறிவாயுள்ள சிவபெருமான் மேற்பட்ட அவ்வடித்தழும்பு அரிமருத்தன பாண்டியன் முதுகிலும், அவனுடைய மனைவியர்களின் முதுகிலும், அமைச்சர் முதுகிலும், அரசிளங் குமரர் முதுகிலும், சேனவீரர் முதுகிலும், குதிரைகளின் மேலும், யானைகளின் மேலும் பட்டது; சூரியன் முதலான ஒன்பது

1. இங்கே, ''கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை, மண் சுமந்து கூலிகொண்டக் கோவான் மொத்துண்டு, புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண்'' (திருவாசகம் - திருவம்மானை) எனவும், ''மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளித் தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட, புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ '' (திருவாசகம் - திருப்பூவல்லி) எனவும், ''மண்ணகழ்ந்(து) எடுத்து வருபுனல் வையைக், கூலஞ் சுமக்கக் கொற்றாளாகி, நரைத்தலைமுதியோள் இடித்தடு கூலிகொண்(டு), அடைப்பது போல உடைப்பது நோக்கிக், கோமகன் அடிக்க அவனடி வாங்கி, எவ்வுயிர் எவ்வுல(கு) எத்துறைக் கெல்லாம், அவ்வடி கொடுத்த அருள்நிறை நாயகன்" (கல்லாடம்) எனவும் வரும் அடிகள் சிந்திக்கற்பாலன.

கோள்கள் மேலும், நட்சத்திரங்கள் மேலும், நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்கள் மேலும், மேகங்கள் மேலும், வேதங்கள் மேலும், அறுவகைச் சமயங்கட்கும் முத்தித்தானமாயுள்ள கடவுளர் மேலும், தேவர்கள் மேலும், முனிவர்கள் மேலும் பட்டது; மனிதர், நரகர், பறவை விலங்கு, பாம்பு, கறையான், எறும்பு முதலாகிய இயங்கியற் பொருள் மேலும், மலை, மரம், செடி, புல் முதலாய நிலையியற் பொருள்மேலும், ஊனிற் பொருந்திய கருவின் மேலும், உயிரில்லாத சித்திரங்கள் மேலும் பட்டது.

திருமால் திடுக்கிட்டுத் தம் அரிய துயிலைவிட்டெழுந்தான்; பிரம தேவன படைப்பினைவிடுத்து, ''இஃது என்னை'' என்று வியந்தான், தேவேந்திரன் அஞ்சினன்; தேவரும் பிறரும் உடல் நடுங்கினர்; இயக்கர், சித்தர், சாரணர் முதலானோர் தம் முதுகிற்பட்ட புண்ணினை ''இது யாது?,'' என்று ஒருவருக்கொருவர் காட்டி அறியாதவர்களாய் மயங்கினர்கள்.

ஏவலாளர் வந்தியிடம் சென்று அரசனிடம் வர அழைத்தல்

சோமசுந்தரக் கடவுள், எல்லாவுயிர்களும் தாமே என்பதையும், அன்பிற்கு எளியர் என்பதையும், அனைவருக்குங் காட்டும்பொருட்டு திருமேனியில் பிரம்படிபட்டும், ஒருகூடை மண்ணைக்கொட்டி நீரின் வேகம் குறையக் கரையை உயர்த்தி, வேலையை முடித்தும் மறந்தருளியதைக்கண்டு, அரசனுடைய கோலாளர் நரைமூதாட்டியாகிய வந்தியார் இடத்திற்கு ஓடினர்; அவளைக்கண்டு துன்புறுத்தி, 'அரசனிடம் வருக' என்று கூறினர். வந்தியார், ''இன்னமும் பாண்டியனால் துன்பமுண்டோ? முன்பு எனக்காக வேலை செய்யச் சென்ற ஆள் என்ன செய்தானோ? இனி எப்படி முடியுமோ'' என்று கருதி சோமசுந்தரக் கடவுளை நோக்கி நின்று வருந்தினள்.

வந்தியார் தேவ விமானத்தில் சிவலோகம் செல்லல்

அப்போது அன்பையே தேனுகக் கலந்து ஊட்டிய பிட்டினைத் திருவமுது செய்தருளிய சோமசுந்தரக்கடவுள் திருவருளினாலே சிவ கணத்தவர் வானிலிருந்து ஒளிவீசும் தேவவிமானத்துடன் புவியிசை இறங்கிவந்து, 'அன்னையே! வருக'' என்று விரைவில் அதில் ஏற்றிக் கொண்டு தேவர்களின் பூமழையும், பண்ணிறைந்த இசையின் ஒலியும், வேதமந்திரங்களின் ஒலியும், தேவதுந்துபிகளின் முழக்கமும் வானின் கண் ஓங்கச் சிவலோகத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.